
November 1909



தொகுதி. 2.
பகுதி. 5.

வருஷசந்தா
உள்நாட்டுக்கு ரூ. 3-0
வெளிநாட்டுக்கு ரூ. 4-8
தபாற்கூலி
உள்பட

# விவேகபோதினி



# VIVEKA BODHINI

பொருளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வழிபாடு ... ... ... ... | 129 |
| வேத பாகங்கள் ... ... ... ... | 130 |
| இயற்கைப் பொருள், செயற்கைப்பொருள் ... | 134 |
| துக்கம் ... ... ... ... ... | 136 |
| மகம்மாரியும்—எலிகளும் ... ... ... | 138 |
| இயற்கை அற்புதங்கள்—வாயுவிலுள்ள தண்ணீரும் அதன் ரூபாந்திரங்களும் ... ... ... | 141 |
| பௌத்த சங்கங்கள் ... ... ... | 145 |
| இந்துலேகை—ஒரு மலையாளநாவல் ... ... | 148 |
| சிறுவர்க்கான பக்கங்கள் ... ... ... | 154 |
| ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... ... ... | 156 |
| விசேஷ வர்த்தமானங்கள் ... ... ... | 158 |
| புத்தக வரவு ... ... ... ... | 159 |


Publishers:—The General Supplies Co., Mylapore, Madras

# சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மஹா மஹோபாத்யாய பிரஹ்ம ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள் இயற்றியவை:—

| | | | |
|---|---|---|---|
| சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியருரை, 2-ம் பதிப்பு, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் ... ... | 6 | 0 | 0 |
| ஷை நாமகளிலம்பகம் குறிப்புரையுடன் | 1 | 8 | 0 |
| சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரையும் பழைய அரும்பத உரை முதலியனவும் ... ... ... ... | 5 | 8 | 0 |
| மணிமேகலையும் அரும்பதவுரை முதலியனவும் ... ... ... | 5 | 0 | 0 |
| புறநானூறு மூலமும் உரை முதலியனவும் | 4 | 0 | 0 |
| மணிமேகலைக் கதைச் சுருக்கம் அரும்பத உரையுடன் ... ... ... | 0 | 8 | 0 |
| திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் அல்லது வேம்பத்தூரார் திருவிளையாடல், அரும்பதவுரை முதலியவற்றுடன். ... ... ... | 2 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| பிரதாப முதலியார் சரித்திரம் ... | 1 | 0 | 0 |
| மதிமோசவிளக்கம் ... ... | 0 | 12 | 0 |
| ஆராபிநைட் கதை படங்களுடன் ... | 2 | 8 | 0 |
| மஹாராஜா துறவு ... ... | 0 | 6 | 0 |
| விபின் சந்திரபாலர் உபன்யாஸம் ... | 0 | 8 | 0 |
| குணசீலன் ... ... ... | 0 | 10 | 0 |
| கமலாம்பாள் சரித்திரம் ... ... | 1 | 4 | 0 |
| தேவலோக கிரிமினல் கேஸ் ... | 1 | 8 | 0 |
| களாபூர்ணோதயம் ... ... | 0 | 10 | 0 |
| விக்டோரியா சரித்திரம் ... ... | 1 | 4 | 0 |
| பிரபு லிங்கலீலை (வசனம்) ... ... | 0 | 12 | 0 |
| விநோதரஸமஞ்சரி ... ... | 1 | 2 | 0 |
| தானவன் எனும்போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக்குற்றங்கள் ... | 1 | 0 | 0 |
| கைவல்லிய நவநீதம், மூலமும் உரையும்... | 1 | 0 | 0 |
| சிவமஹாபுராணம் 48 படங்களுடன் ... | 5 | 0 | 0 |
| நாலடியார் மூலமும் உரையும் ... | 1 | 2 | 0 |
| ஸ்ரீபக்த லீலாம்ருத வசனம் ... | 3 | 0 | 0 |
| ஸ்ரீ விவேகாநந்த விஜயம் ... | 1 | 4 | 0 |
| நைடதம் மூலமும், உரையும் (படங்களுடன்) ... ... ... | 2 | 0 | 0 |
| மாணிக்க வாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் ... | 1 | 0 | 0 |
| பிரபோத சந்திரோதய வசனம் ... | 1 | 0 | 0 |
| பக்த விஜயம் முதல்பாகம் ... | 2 | 0 | 0 |
| ஷை 2-ம் பாகம் ... ... | 2 | 0 | 0 |
| ஷை 3-ம் 4-ம் பாகங்கள் ... | 2 | 0 | 0 |
| நீதிவிவாதமஞ்சரி (இந்தியன் பினல் கோட் சட்டம் சாக்ஷி சட்டம், அடிதண்டனைச் சட்டம், இவை வியாக்கியானத்துடன் ... ... ... | 2 | 8 | 0 |
| தேசதத்வசாஸ்திரம் படங்களுடன் ... | 2 | 8 | 0 |
| கலாவதி ... ... ... | 1 | 8 | 0 |
| ரூபாவதி ... ... ... | 1 | 0 | 0 |
| மதிவாணன் ... ... ... | 0 | 6 | 0 |
| சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா 6-திருமுறையும் ... | 3 | 0 | 0 |
| கருட புராணம் வசனம் படத்துடன் ... | 0 | 8 | 0 |
| தேவி பாகவதம் ... ... ... | 3 | 12 | 0 |

## இப்பொழுதுதான் தயாராயிற்று
## துரைத்தன விளக்கம்
## ELEMENTS IN CIVICS

ஆங்கிலேயர்களுடைய அரசியின் முறைகளையும், அவர்களால் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளையும், தங்களுடைய கடமைகளையும் பாத்தியதைகளையும் ஸாமான்ய ஜனங்களும் மாணாக்கர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று

"துரைத்தனவிளக்கம்" என்ற நூல் இயற்றப்பட்டிருக்கிறது. துரைத்தனத்தாருடைய நன்மைகளையும், குடிகள் அவர்களுக்குச் செய்யும் உதவிகளையும், ஷை நன்மைகள் அளிக்கப்படும் விதங்களையும்; இந்தியாவின் சுருக்கமான சரித்திரத்தையும் முறையே தெரிவிப்பனவாகிய நான்கு பாகங்கள் இப்புஸ்தகத்தில் அமைந்துள்ளன. புஸ்தகத்திலுள்ள விஷயங்கள் படிப்பவர் மனத்தில் நன்றாகப் பதியும் பொருட்டு, சுமார் 50-பொருத்தமான சித்திரப்படங்களும், தேசப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள். குடித்தனக்காரர்கள், பெண்பாலார்கள் யாவருக்கும் இப்புத்தகம் அவசியமென்றே நினைக்கிறார்கள். ஏழைகள் கூட வாங்கிப் படிக்கவேண்டுமென்றே குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றது. பதிப்பித்திருக்கிற புத்தகங்கள் குறைவாய் இருப்பதால் சீக்கிரம் பெற்றுக்கொள்ள வேண்டும். விலை ரூபாய் ஒன்று

---

தயாராகிவிட்டது! தயாராகிவிட்டது!!

## 1910-ம் வருஷத்திய
## ஜ்யோதிர் விலாஸ பாக்கட் டைரி

இதில் யாவருக்கும் உபயோகமான அநேக விஷயங்கள் தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த டைரியின் மேன்மையைக் குறித்து அநேக கல்விமான்கள் மிகவும் சிலாகித்து நற்சாக்ஷி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். அழகாய் அச்சிட்டு பைண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| சாதாரண பைண்டு ... ... | 0 | 4 | 0 |
| பிளாப், பென்சலுடன் ... ... | 0 | 6 | 0 |

வியாபாரிகளுக்கு ரேட்டு பிரத்தியேகம்.
வேண்டுவோர் உடனே ஆர்டர் செய்யவும்.

**ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,**
மைலாப்பூர், மதராஸ்

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி 2 } ஸௌம்ய௵ கார்த்திகை௴ 1909-௵ நவம்பர்௴ { பகுதி 5


## கடவுள் வழிபாடு

### THE WORSHIP OF THE LORD

ஆத்மாவின் நித்யத்வத்தை மஹான்கள்போல ஸதா மாறாத ஞாபகத்தில் வைத்து, உயிருள்ள பொழுதே பிறவி பிணியின் நீங்கி ஆனந்திப்பதற்கு கடவுள் வழிபாடே முக்கிய ஸாதனம். அதைப்பற்றிச் சற்று விசாரிக்கப் புகுவோம்.

'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு'

என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவர். ஆகவே, உலகத்துக்கு முதற்கர்த்தா ஒருவர் உண்டென்பது நன்றாய்ப் புலப்படுகின்றது. அந்தக் கர்த்தாவினாலே உலகத்திலுள்ள சர்வ ஆன்மாக்களும் அவ்வவற்றிற்குரிய தனு கரண புவனபோகங்களைப்பெற்று வாழ்கின்றன என்பதும் விளங்குகின்றது. அத்தகைய முழுமுதற் கடவுளை ஒவ்வொருவரும் வழிபடவேண்டியது அத்தியாவசியம். ஏனெனில்,

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழா ரெனின்'

என்ற குறளின் பிரகாரம் கல்வியைக் கற்பதின் பிரயோசனம் உலகுக் கிறைவன் ஒருவன் உண்டென்றுணர்வதும் அவ்வுணர்வுக் கேற்றபடி அவ்விறைவனை வழிபட்டு வாழ்தலுமேயாம். இவ்வாறு எல்லாம்வல்ல இறைவனை ஏன் வழிபடவேண்டும்? நன்றாய் உண்டு, உடுத்து, உலாவி காலம் கழிப்பதிலும் கடவுளை வழிபடுவதினால் அடையும் இன்பம் சிறந்ததோ என்றால் நாம் இவ்வுலகத்தில் அநுபவிக்கும் எல்லா இன்பங்களையும்விட ஈசுவர விஷயமாய் அடையும் இன்பமே சிறந்தது என்பது

'கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே'

என்னும் அப்பர் சுவாமிகளுடைய தேவாரத்தால் நன்றாய் விளங்கும். இப்படிப்பட்ட பெறுதற்கரிய பேரின்ப சுகம் இருக்க, சிலர் அதனை முற்றிலும் மறந்து ஈசுவரசிந்தனையே யில்லாமல் நாட்களைக் கழிக்கின்றார்களே என்றால் அவர்களுக்கு உலக இன்பத்தைப் பார்க்கிலும் சிறந்த இன்பம் உண்டு என்பதும் அந்த இன்பத்தை அடைய வேண்டிய விதம் இப்படிப்பட்டது என்பதும் விளங்காத காரணமேயன்றி வேறில்லை. உலகத்திலுள்ள அளவற்ற பிறவிகளில் மானிடப்பிறவியே மேலானது. மானிடப்பிறவியிலும் கூன், குருடு, செவிடு முதலிய குற்றங்களை நீக்கிப்பிறத்தல் அருமை. அப்படி பிறந்தாலும் நல்ல குலத்தில் வந்துதிப்பது அருமை. நல்லகுலத்தில் வந்து பிறந்தாலும் கடவுளை வழிபடுதல் அருமை. மானிடப் பிறப்பில்தெய்வசிந்தனையைத்தடுக்கும் பலவிதமான துன்பங்களை, திருவாசகம், போற்றித்திரு அகவல் என்னும் பாகத்தில் 11-ம் வரிமுதல் 42-வது வரிவரையில் மாணிக்கவாசக சுவாமிகள் தமது அற்புதத் திருவாக்கினால் விளக்கிக்காட்டியருளினர்.

ஆகையால் உலகத்தில் இத்தனை ஆபத்துக்களுக்கும் பிழைத்து தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையுண்டாகி வழிபடவேண்டும். அப்படி இறைவனை வழிபட்டால் அடையும் பயன் யாதெனின்,

'பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசே ராதார்'

என்னும் குறளின்படி பிறவித்துன்பத்தை யொழித்து என்றும் அழியாத பேரின்பநலத்தைப் பெற்று வாழ்தலாம்.

தி. பாலசுப்பிரமணிய முதலியார், B. A.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்யஸூ கார்த்திகை [பகுதி 5

## வேதபாகங்கள்

**THE VEDAS—THEIR DIVISIONS**

வேதங்கள் ரிக் யஜுஸ் ஸாம அதர்வணம் என நான்கு என்றும், ஒவ்வொரு வேதத்திலும் ஸம்ஹிதை அல்லது மந்திரங்கள், பிராம்மணங்கள், உபநிஷத்துக்கள் என மூன்று உட்பிரிவுகள் உண்டென்றும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்த விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாக இங்கு விசாரிக்கப்புகுவோம்.

வேதங்களின் உட்பிரிவாகிய ஸம்ஹிதையானது அநேகவித வைதிக கர்மங்களில் உபயோகப்படும்படியான மந்திரங்களை அடக்கியுள்ளது. இவைகளின் பொருள் விளங்கும்படி மனனம்செய்து மோக்ஷவிஷயஞானத்தை ஒருவன் அடையவேண்டுமாதலின் இவைகளுக்கு மந்திரங்கள் என்ற பெயர் உண்டாயிற்று. யாகாதிக்ருதுக்களிலும் இம்மந்திரங்கள் ஸமயத்திற்குத் தகுந்தபடி எடுத்தாளப்படவேண்டியவைகளாயும் இருக்கின்றன. யாகத்தில் ஸோமரஸத்தைப் பிழியும் காலத்து சில மந்திரங்களும், இதை ஆகுதி செய்யுங்கால் சிலவும், நெய் ஆகுதி செய்யுங்கால் சிலவும், இவ்வாறு ஸமயங்களுக்குத் தக்கபடி இம்மந்திரங்கள் உபயோகப்பட்டும் வரவேண்டியவையாக விருக்கின்றன. இந்த மந்திர பாகங்கள் தான் வேதங்கள். மற்றைப் பாகங்கள் இவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் வியாக்யான நிலையில் இருப்பவைகளே.

முதல் வேதம் முக்கியமாக ஸ்தோத்திரங்களாலேயே நிறைந்திருப்பதால் அதற்கு ரிக்வேதம் என்று பெயர்வந்தது, (ரிக் = ஸ்தோத்திர சுலோகம்). யாகஸம்பந்தமான மந்திரங்களை உடைய வேதமாகிய இரண்டாம் வேதத்திற்கு யஜுர்வேதம் என்று பெயர். இப்பதம் ஆராதனை என்று பொருள்படும் யுஜ் என்ற தாதுவிலிருந்துவந்தது. இதிலிருந்தேதான் யாகம் என்ற பதமும் வந்தது. யஜுர் வேதத்தில் இரண்டு பெரிய பாகங்கள் உண்டு. அவைகளுக்கு முறையே கிருஷ்ணயஜுர்வேதம் என்றும், சுக்கில யஜுர்வேதம் என்றும் பெயர். இவைகளை முறையே தைத்ரீயர்களும் வாஜஸனேயர்களும் பின்பற்றுகின்றனர். ரிக்வேதமந்திரங்களுடன் இந்த வேதத்தில் அநேக ஸூத்ரங்களும் அடங்கியிருக்கின்றன. ஸோமயாகத்தில் கானத்திற்கு அவசியமான சுலோகங்கள் ஸாமவேதத்தில் காணப்படுகின்றன. இவைகளில் 75 ரிக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இவைகளை யாககாலத்தில் கானம் பண்ணவேண்டியது. இம்மூன்று வேதங்களையே அடிக்கடி வேதங்கள் என்று கூறுவது. நான்காவதாகிய அதர்வணவேதத்தில் இம்மூன்றிலும் உள்ள மந்திரங்களும், யோகஸித்திக்கு வேண்டிய மந்திரங்களும் அடங்கியிருப்பதால் இது தனி வேதமாக மதிக்கப்படவில்லை. இந்த வேதத்திற்கு பிரஹ்மவேதம் என்று பெயர். யாகத்தில் ஹோதா, அத்வர்யு, அல்லது உத்காதபண்ணும் குற்றங்களைத் திருத்த ஏற்பட்டிருக்கும் பிரம்மா கூறவேண்டிய மந்திரங்கள் இதில் இருப்பதாலும், பரப்பிரம்மத்தின் ஸ்வரூபத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் உபநிஷதங்களில் முக்கியமானவை இவ்வேதத்தில் சேர்ந்தவைகளாகையாலும் இந்த அதர்வண வேதத்திற்கு பிரம்மவேதம் என்றபெயர் வந்தது.

முற்கூறியதில் நான்கு புதிய பெயர்கள் காணப்படுகின்றன. அவையாவன, ஹோதா, அத்வர்யூ, உத்காதா, பிரம்மா என்பவைகளே. வேதங்களில் ஸம்ஹிதாபாகங்கள் யாக விஷயமாகவே இருக்கின்றன. யாகத்தைப் பண்ணுபவனுக்கு யஜமானன் என்று பெயர். இவன் முக்கியமாக நான்கு பிராம்மணர்களை வைத்துக்

கொண்டு தனது யாகத்தை நடத்துகிறுன். அவர்களே முற்கூறிய நான்கு பெயரை வஹித்து யாகத்தை நடத்திவைப்பவர்கள். அக்னியில் ஆஹுதி கொடுப்பவனுக்கு ஹோதா என்றும், யாகத்திரவ்யம் முதலியவைகளை மேல் பார்வை பார்த்து யாகத்தை நடத்துபவருக்கு அத்வர்யூவென்றும், ஓர் ஆஹுதியை வாங்கவந்திருக்கும் தேவதையை கானமூலமாகத் துதிப்பவருக்குஉத்காதா,என்றும்,முற்கூறிய மூன்று பெயரது வேலைகளை மேல்பார்வை பார்ப்பவருக்கு பிரம்மா என்றும் பெயர்.முற்கூறிய நான்கு பெயருள் அத்வர்யூவே யஜமானனுக்கு முக்கிய ஸஹாயம் செய்பவன். இவன் யஜுர் வேத அத்தியயனம் செய்தவனுக இருக்கவேண்டும். இந்த வேதம் யாக விஷயங்கள் எல்லாவற்றையும் ஸரிவர அறிந்து நன்ருக நடத்தும் சக்தியை இவனுக்கு உண்டாக்குகிறது. உதாரணமாக, யாகவேதி உண்டாக்கும்விதம், யாக பசு லக்ஷணம், யாகத் திரவ்யங்களின் விவரம், இவைகளின் அதிஷ்டான தேவதைகளைத் துதிக்கும் மந்திரங்கள், ஆகிய இவைகளை யஜுர்வேதம் இவனுக்கு கற்பிக்கின்றது. ஆகையால் இந்த வேதத்திற்கு அத்வர்யூ வேதம் என்று பெயர். இதன் மந்திரபாகம் 40 அத்தியாயங்களையுடையது. இவைகளுள் 1886 சுலோகங்கள் இருக்கின்றன. இந்தச் சுலோகங்களுள், சற்றேறக்குறைய பாதி ரிக்வேதத்தில் உள்ளன.

ரிக்வேதத்திலுள்ள ஸம்ஹிதா பாகம் 1017 ஸூக்தங்களை அடங்கியுள்ள பத்து மண்டலங்களாகப் பிறிக்கப்பட்டிருக்கின்றது. யாகத்தில் ஆஹுதி கொடுக்கும்பொழுது ஹோதா அது போய்ச் சேரவேண்டிய தேவதைக்குரிய ருக்வேதமந்திரத்தைச் சொல்லி அந்த யாகசாலைக்கு வந்து ஆஹுதியை தயவுசெய்து பெற்றுக்கொள்ளும்படி அவனே அழைக்கிறுன். இந்த வேதத்தில் தேவதைகளுக்கு உரிய மந்திரங்களோடுகூட ஆங்காங்கே பரம்பொருளைத் துதிக்கும் மந்திரங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இதனுல் கர்மங்களைப் பற்றிக் கூறும் பாங்களிலும் ஞானிக்குரிய விஷயங்களும் காணப்படுகின்றன என்பது நன்கு விளங்கும்.

ஸாமவேதம் என்ற பதத்திற்கு கானவேதம் என்று பொருள். இதை யாகத்தில் உத்காதா சொல்லவேண்டியது. இந்த வேதம் 15-காண்டங்களை உடையது. இவைகளுள் 460 மந்திரங்களோடு கூடிய 32 அத்தியாயங்களுள்ளன. இந்த வேதத்தை பிரகிருதி, ஊஹம், ரஹஸ்யம், அருணம் என்ற நான்குபாகங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஸ்வர ஒழுங்குப்படி கானம் செய்யலாம். இந்த ஸ்வரங்கள் அச்சுப்புஸ்தகங்களில் தக்க குறிகளால் காட்டப்பட்டும் இருக்கின்றன.

அதர்வவேதம் 731 மந்திரங்களடங்கிய 20 காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

இனிமேல் பிராம்மணங்கள் என்ற வேத பாகங்களைப்பற்றி விசாரிக்கப்புகுவோம். இவைகள் யாகங்கள் நடத்தவேண்டிய விதத்தையும், வேதங்களில் காணப்படும் அரும்பதங்கள், ஸூத்திரங்கள், மந்திரங்கள் ஆகிய இவைகளின் விசேஷப்பொருள்களையும், இன்ன கர்மத்தில் இன்ன மந்திரங்கள் சொல்லவேண்டும் என்பதையும், யஜமானனுக்கு ஓர்வித கர்மத்தால் வரும் சிறப்பையும், வேருேர்வித கர்மத்தால் வரும் இழிவையும், இவைகளை விளக்குவதற்கு தகுந்த முன்னேர்கள் கதைகளையும் அடங்கியுள்ளன. ஆகவே இவைகள் ஸம்ஹிதா பாகத்திற்குத் தெளிவான வியாக்யானங்கள்போல்வன. வேதங்களுக்கு பிரம்மம் என்று ஒரு பெயர் உண்டு. இதனுல் இவ்வியாக்யான ரூபமான பாகங்களுக்கு பிராம்மணங்கள் என்று பெயர். பிராம்மணங்களை உற்றுநோக்கில் இரண்டுவிதமாகக் காணப்படும். இவைகள் விதிகள், அர்த்தவாதங்கள் என்பவைகளே. யாக ஸம்பந்தமான கோட்பாடுகளே விதிகள். இந்த விதிப்படி நடப்பதால்

உண்டாகும் நன்மையையும், இப்படி நடவாமலிருந்தால் உண்டாகும் தீமையையும் விஸ்தரித்துக் கூறுவது அர்த்தவாதம். இஹலோக ஸுகம் வேண்டும் என்பவன் வாயு பகவானுக்கு வெள்ளை ஆட்டைக்கொன்று ஆஹுதி கொடுக்கவேண்டும் என்பது விதி. வாயுவுக்கு வேகமாக செல்லும் சக்தி இருப்பதால் அதை எண்ணிப் பூஜிப்பவனுக்கு சீக்கிரத்தில் நல்ல பலன் கிடைக்கும் என்பது அர்த்தவாதம். காதிர மரத்தால் யூபஸ்தம்பம் செய்யவேண்டும் என்பது விதி. இம்மாதிரியான யூபஸ்தம்பத்தைக்கொண்டு யாகம் நடத்தி தேவதைகள் ஸ்வர்க்கம் அடைந்தனர் என்பது உபாக்யானம். யூபஸ்தம்பத்திற்காக இம்மரத்தை உபயோகிக்கும் யஜமானனுக்கு இம்மாதிரி ஸ்வர்க்க வாஸம் கிடைக்கும் என்பது அர்த்தவாதம்.

பிராம்மணங்களுடைய இறுதியில் வேதங்களது முக்கியமான பாகங்களாகிய ஆரண்யகங்கள் காணப்படுகின்றன. இவைகளுள்தான் சிறந்த உபநிஷத்துக்கள் அடங்கியிருக்கின்றன. ஆரண்யகம் என்ற பதத்திற்கு காட்டில் இயற்றப்பட்ட நூல்கள் என்று பொருள். யாகாதி கர்மங்களை விட்டு துறவறம்பூண்டு வனம் சென்று தமது நாளைத் தபவில் கழிக்கும் குணமுடையோர்க்கே இவைகள் தகுந்த நூல்கள். இவைகளுள் அடங்கியிருக்கும் விஷயம் மிக சிறந்தவை ஆதலால் இவைகளை குரு சிஷ்யனுக்கு ஏகாந்தமாக வனத்தில் உபதேசம் பண்ணவேண்டுமே ஒழிய லௌகிகம் நிறைந்த கிராமாதிகளில் செய்யக்கூடாது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உபநிஷத்துக்கள் அடங்கிய ஆரண்யகங்கள் பிராம்மணங்களின் பிற்பாகங்களாகையால், வேதங்கள் மந்திரங்கள், பிராம்மணங்கள் என இருவகைப்படும் எனக் கூறலாம். ஆதலால் இங்கு பிராம்மணங்களைப்பற்றிக் கூறுங்கால் சுருக்கமாக ஆங்காங்கே அவைகளுள் இருக்கும் உபநிஷத்தின் ஸ்வரூபத்தையும் சுருக்கிக்கூறுவோம்.

ரிக்வேதத்தில் இரண்டு பிராம்மணங்கள் இருக்கின்றன. அவையாவன அயிதிரேயப் பிராம்மணம், கௌஷீதிகி பிராம்மணம் என்பவைகளே. முன்னது 40 அத்தியாயங்களை உடையது, இவைகள் எட்டு பஞ்சகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிராம்மணத்தின் முக்கியபாகம் ஸோமயாகத்தைப்பற்றிக் கூறுவது. இதன் முதல்பாகம் அக்னிஷ்டோமம் என்ற ஒரு நாளில் முடியும் யாகத்தையும், கவாமயனம் என்ற ஒரு வருஷத்தில் முடியும் யாகத்தையும், துவாதசாஹம் என்ற 12 நாள் யாகத்தையும் பற்றிக்கூறுகின்றது. அடுத்தபாகம் அக்னிஹோத்ரம் முதலிய விஷயங்களைப்பற்றியது. இறுதிப்பாகமானது ராஜ்ய பட்டாபிஷேகம்,ராஜனதுபுரோஹிதர் நிலைமுதலியவற்றைப்பற்றிக் கூறுவது. இந்தப் பிராம்மண முடிவிலிருக்கும் ஆரண்யகத்தில் அயிதிரேய உபநிஷத்து காணப்படுகின்றது. பின்னதாகிய கௌஷீதிகி பிராம்மணத்திற்கு ஸாங்கயனப் பிராம்மணம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதிலும் ஸோமயாகத்தையே முக்கியமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதியில் இது அக்னி ஆதானம், அக்னிஹோத்ரம், பௌர்ணமி, அமாவாஸ்யைகளில் செய்யவேண்டிய கர்மங்கள், ஒவ்வொரு மாஸத்திலும் செய்யவேண்டிய நான்கு யஞ்ஞங்கள் ஆகிய இவைகளைப்பற்றி விஸ்தரிக்கின்றது. இதன் இறுதியில் உள்ள ஆரண்யகத்தில் தான் கௌஷீதிகி உபநிஷத்தும் மற்றும் சில சிறு உபநிஷத்துக்களும் அடங்கி உள்ளன.

கிருஷ்ண யஜுர்வேதத்தில் இரண்டு சாகைகள் உண்டு, அவையாவன மைத்ரயணீய சாகை தைத்திரீய சாகை ஆகிய இவைகளே. முன்னதற்கு தனியாகப் பிராம்மணங்கள் இல்லாவிடினும் அதன் ஸம்ஹிதா பாகங்களில் ஆங்

காங்கே உள்ள வசனபாகங்களே அதற்கு பிராம்மணமாகி விடுகின்றன. பின்னதற்கு மூன்று அத்தியாயங்களோடு கூடிய தைத்திரீய பிராம்மணம் என்ற பிராம்மணம் ஒன்று உண்டு. இதன் இறுதியில் உள்ள ஆரண்யகத்தில் தைத்திரீயம், மஹா நாராயணம் என்ற உபநிஷத்துக்கள் காணப்படுகின்றன. மஹா நாராயண உபநிஷத்திற்கு யாஞ்ஞிகி உபநிஷத்து என்ற பெயரும் உண்டு. சுக்கில யஜுர் வேதத்திற்குத் தனியாக மிகச் சிறந்ததான சதபதப் பிராம்மணம் என்ற பிராம்மணம் ஒன்று உண்டு. இது 100 அத்தியாயங்களை உடையது. இது இரண்டு சாகைகளாகக் காணப்படுகிறது. முன்னது 140 காண்டங்களை உடைய மாத்யந்தினசாகை, பின்னது 17 காண்டங்களையுடைய காண்வ சாகை. இறுதி கண்டத்தில் ஓர் ஆரண்யகம் இருக்கிறது. இதன் இறுதி ஆறு அத்தியாயங்களுக்கே பிரஹதாரண்யக உபநிஷத்து என்று பெயர். சதபதப் பிராம்மணத்தில் மிகத்தெளிவாயும் ஒழுங்காயும் யாக விஷயங்களைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கின்றது. இதன் உபநிஷத்தோ எல்லா உபநிஷத்துக்களையும் விட மிகச்சிறந்தது. இதில் ஈசோபநிஷத்தும் இறுதியில் காணப்படுகிறது. இதனோடு 17-சிறிய உபநிஷத்துக்கள் காணப்படுகின்றன.

ஸாமவேதத்தில் உள்ள தண்டிசாகை, தளவகாரசாகை ஆகிய இவைகளுக்கு முறையே முக்கியமாக ஒவ்வொரு பிராம்மணம் உண்டு. முன் சாகையின் பிராம்மணத்திற்கு பஞ்ச விம்சதி பிராம்மணம் என்று பெயர். இதில் 25-அத்தியாயங்கள் இருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. இது ஸோமயாகத்தைப்பற்றிக் கூறுவது. இந்துசாகைக்கு வேறொரு பிராம்மணமும் உண்டு. இதற்குசாந்தோக்ய பிராம்மணம் என்றுபெயர். இதில் முதல் இரண்டு அத்யாயங்கள் ஜனனம், விவாஹம், தேவதைகள் முதலியவைகள் ஸம்பந்தமான மந்திரங்களை அடக்கியுள்ளன. பின்னுள்ள பத்து அத்தியாயங்களுக்கும் சாந்தோக்ய உபநிஷத்து என்று பெயர். பின்னதாகிய தளவகார சாகையின் பிராம்மணத்தில் கேனோபனிஷத்து அடங்கியிருக்கின்றது. ஸாம வேதத்துள் அநேக சிறிய உபநிஷத்துகள் அடங்கியிருக்கின்றன.

அதர்வணவேதத்தில் சற்றேறக்குறைய 27-உபநிஷத்துகள் உண்டு. இந்த வேதத்தில் கோதப் பிராம்மணம் இருக்கின்றது. இது இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு முறையே 5, 6 அத்தியாயங்களை உடையது. இதில் உள்ள உபநிஷத்துக்களுள் முண்டக, பிரசன, மாண்டூக்கியங்களே முக்கியமானவை.

முற்கூறிய மாதிரியல்லாமல் வேறு விதமாகவும் வேதங்களைப் பிரிக்கலாம். இப்பாகங்களுக்கு கர்மகாண்டம், ஞானகாண்டம் என்று பெயர். முன்னதுள் மந்திரங்களும் பிராம்மணங்களும் அடங்கும். பின்னதுள் உபநிஷத்துக்கள் அடங்கும். யாகாதி கர்மங்களின் மூலமாக ஸ்வர்க்கலோகங்கள் அடைவிக்கவேண்டும் என்பதே கர்மகாண்டத்தின் முடிவு. ஞான காண்டமோ, பிரம்மஞானத்தைப் புகட்டி அதன் மூலமாக ஸகல கர்மங்களிலிருந்து விடுவித்து பரமபதம் அடைவிக்கவேண்டும் என்பதை முடிவாக உடையது. இந்தக் காரணத்தால்தான் ஞானகாண்டம் கர்மகாண்டத்தைவிட மேலானதென்றும், ஞானகாண்டமே வேதாந்தம் என்றும் மதிக்கப்பட்டு வருகின்றது.

# இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள்

## NATURAL AND ARTIFICIAL PRODUCTS

நாம் இப்பூலோகத்து காண்கிற பொருள்கள் இயற்கைப் பொருள் செயற்கைப்பொருளென இருவகைப்படும். இயற்கை செயற்கைப் பொருள்கள் யாவை யெனவும் அவைகட்குள்ள பேதங்களும் சம்பந்தங்களும் என்னவென்றும் ஆராய்ச்சி செய்வோம்.

நம்மைச்சுற்றி நாம் காண்கிற மலை, சமுத்திரம், ஆகாயம், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் இவைகள் இயற்கைப் பொருள்களாகும். நாம் கட்டும் வீடுகள், கப்பல்கள், ஆவிவண்டிகள், மின்சாரத் தந்திகள், நாம் உடுக்கும் உடைகள், பீங்கான் கண்ணாடிச் சாமான்கள், சாஸ்திரப் பயிற்சியிற்றேர்ந்து ஆவியினாலும் மின்சாரத்தினாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற அநேக யந்திரங்கள், நமது தட்டுமுட்டுச் சாமான்கள், இன்னும் அநேகவைகள் செயற்கைப்பொருள்களே.

இயற்கைப் பொருளாகிற மலை, ஆகாயம், சமுத்திரம் முதலியன இல்லாவிடில் உயிர்ப்பிராணிகள் உலகில் ஜீவித்திருப்பது அசாத்தியம். உதாரணம்—சமுத்திரத்தின் ஜலம் சூரிய வெப்பத்தினால் ஆவியாக்கப்பட்டு, ஆவி மேகரூபமாக மாறி, அம்மேகம் மலைகள்போலொத்த உயர்ந்த ஸ்தலங்களில்குளிர்ச்சியைப்பெற்று மழைத்துளிகளாய் விழுகின்றது. அம்மழை ஜலம் மலைகளினின்றும் நதிகளாக உற்பத்தியாகி, அந்நதிகள் காட்டில் பரவியோடி, அநேக கோடிப் புற்பூண்டுகளுக்கும் ஜீவராசிகளுக்கும் ஆகாரமாகி ஆகார உபகருவியுமாகி கடைசியாக சமுத்திரத்திற்கே போய்ச் சேருகின்றது

ஜீவிதத்திற்கு இன்றியமையாத பொருள்கள் வாயு, தண்ணீர், உணவு என இம்மூன்றே. இம்மூன்றும் இயற்கையிலே நமக்குக் கிடைக்கின்றன. முதலில் வாயுவின்றி எப்பிராணியும் ஜீவித்திருக்க முடியாது. இரண்டாவது தண்ணீர்.—தண்ணீரின்றி நாம் பானம் செய்வதற் கென்செய்வோம்? நமக்கு உணவுக்கு அவசியமுள்ள தானியம் முதலியனயாவும், புற்பூண்டுகளும், தண்ணீரின்றி உலகின்கண் தழைத்தோங்கா. அநேக புற்பூண்டுகள் நமது உணவுக்கு உபகாரப்படுவதோடு பொதுவாகப் புற்பூண்டுகள், மரங்கள், இவைகள் நமக்கு இன்றியமையாதவை. நாம் வெளியே உமிழ்கின்ற கரியமலவாயுவை, மரங்களும் புற்பூண்டுகளும், சூரிய வெளிச்சத்தில் உட்கொண்டு, பிராணவாயுவை வெளியே உமிழ்கின்றன. ஆகவே பிராணவாயு ஜீவராசிகட்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு மரங்கட்கும் புற்பூண்டுகளுக்கும் கரியமலவாயு அவசியம்.

முதல் முதல் நமது கிருஷியை எடுத்துக்கொள்வோம். ஆதியில் கிருஷி எவ்விதமுண்டாயிற்றென்றும், தானியங்களை விதைத்து அதினின்றும் அநேகமடங்கு தானியத்தை நாம் பெறுவதை எவ்வாறு கற்றுக் கொண்டோமென்றும் ஆலோசிப்போம். மனிதன் உண்டாயின உடன்தானே அவனுக்கு அவசியப்படும் ஒவ்வொரு வஸ்துவும் உலகில் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததென சிலர் கூறத்தொடங்குவர். ஆனால் சாஸ்திரீக ஆராய்ச்சியின்படி ஆலோசிக்குமிடத்து இக்கிருஷி மனிதன் ஆராய்ச்சியினாலும் அநேகம் சோதனைகளினாலும் அபிவிருத்தியினாலும் இம்மட்டு விருத்திக்குக் கொண்டுவரப்பட்டதென அறியக்கூடும். வித்தை விதைப்பதனாலேயே அது பயிராய் தானியத்தைக் கொடுக்கிறதென்றும், அவ்வித்தைச் சரியானபடி உழுது உரப்படுத்திய பூமியில் விதைத்தால் மேனி அதிகமாக விளையும் என்றும், இன்னசீதோஷ்ண சமயத்தில் எவ்வித வித்தை விதைத்தால் அதிகலாபத்தைப் பெறலாமென்றும், மனிதன் அறிந்தது வெகு சீக்கிரத்தில் சொற்ப அறிவினால் அல்ல. அநேக நூற்றாண்டுகளாக பரிசோதனையின்மேல் பரிசோதனையாக நெடுங்காலம் உழைத்து நமது முன்னோர் கிருஷியை இம்மட்டு விருத்திக்குக் கொண்டு வந்திருக்கின்றனர். இதினின்றும் கிருஷிப்பயிர்கள் இயல்பாய் உண்டாகிறபோதிலும் மனிதனுடைய ஊக்கத்தாலும் விடாமுயற்சியினாலும் அபிவிருத்தியினாலும் அன்றி அது நமக்குத் தக்க பலனைக் கொடாதென அறிகிறோம்.

ஓர் நல்ல பூமாலையை எடுத்துப்பார்த்தால் அது இயற்கை வாசனை பொருந்திய பூக்களால் ஆக்கப்பட்டிருக்கிறதென அறிகிறோம். அப் புஷ்பங்கள் இயற்கைப் பொருளாயினும், ஒவ்வொரு நிறப்புஷ்பத்தையும் தக்க இடங்களில் அமைத்து அவைகளை மாலைகளாகவும் செண்டுகளாகவும் தாவடங்களாகவும் சரங்களாகவும் செய்வது மனிதனே. புஷ்பங்களில் அநேகவைகளை மருந்துகட்கும், சில

வாசனைச் சாமான்களுக்கும், தாம் வணங்கும் தெய்வங்களுக்கும் உபயோகித்து வருவதும் மனிதனே.

மின்சாரத் தந்தியினால் எவ்வளவு பிரயோஜனத்தை அடைகிறோம். தந்தியில்லா மின்தபால் (Marconis Wireless Telegraphy) இப்போது கண்டுபிடிக்கப்பட்டு நாம் நாளடைவில் எவ்வளவு பிரயோஜனத்தை அடையப்போகிறோம். பேசும் யந்திரமாகிய போனோகிராப் (Phonograph), ரூபத்தையும் அசைவையும் ஒரேசமயத்தில் காண்பிப்பதான ஸின்னமெட்டோகிராப் (Cinematograph) யந்திரமும் கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிஸன் என்னும் மனிதரே. முதலில் தோணி, பின் பாமரக்கப்பல், இப்போது புகைக்கப்பல் இவை யாவும் மனிதனாலேயே கண்டுபிடிக்கப் பட்டவை. நாளுக்குநாள் இவை விருத்தியடைந்து வருவதும் மனிதனுடைய புத்தி யுக்தியினாலேதான். நமது வாசஸ்தலமாகிய வீடுகளும் பெரிய உப்பரிகைகளும் அவைகட்கு வேண்டும் தட்டுமுட்டுச் சாமான்களும் மனிதனுடைய கைவேலையே.

இனி இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்பவைகளின் வித்தியாசமென்ன, வித்தியாசந்தான் ஏதாவதுண்டோவென்று பார்ப்போம். இதற்கும் ஓர் சிறு உதாரண மெடுத்துக்கொள்வோம். ஓர் வீடு கட்டுவதற்கு வேண்டிய சாமான்கள் மண், கல், மரம், இரும்பு, யாவும் இயற்கைப் பொருள்களே. இம் மண்ணைச் செங்கலாக்குவதும், கல்லைக் கொத்திப் பணிப்படுத்துவதும், மரத்தைச் சீவி இழைத்துப் பணி செய்வதும், இரும்பால் செய்வனவற்றைச் செய்வதும் மனிதனே. ஓர் வீட்டைக் கட்டி முடிக்கவேண்டியவர்கள், கொத்தன், தச்சன், கல்தச்சன், கொல்லன், வேறு கூலியாள்கள் இவர்களே. இப்போது வீட்டைக் கட்டுவதற்கு இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் அவசியம் என அறிகிறோம். ஆனால் இச்செயற்கைக் குரித்தான மனிதன் யார்? அம்மனிதனும் இயற்கைப்பொருள் அன்றோ? ஆகவே உலகத்து நாம் காண்கிறது, பேசுகிறது, உபயோகப்படுத்துவது யாவும் இயற்கைப் பொருளோ? ஐயமின்றி அப்படியே! எவையாயினும் இயற்கைப் பொருளே யன்றி செயற்கைப் பொருளாகா வென்பது நமது கொள்கை. இன்னும் ஒரு உதாரணம் எடுத்துக் கொள்வோம்.

நாம் வாசிக்கும் புஸ்தகத்தைத் தான் பார்ப்போம். காகிதம் கந்தைத் துணிகளைக் கூழாக்கி அக்கூழினை யந்திரத்தில் வார்த்து வேண்டிய கனத்திற்கும் நீளத்திற்கும் தகுந்தபடி செய்யப் படுகின்றது. அச்சடிக்கவேண்டிய விஷயம் அச்சடி யந்திரத்தின் மேல் ஆணியின்மேல் உந்தியிருக்கும் அச்செழுத்துக்களைக்கொண்டு பரப்புகிறோம். அதன்பின் அச்செழுத்தின்மேல் மனிதர்களாலேயோ யந்திரத்தினாலேயோ இங்கிடப்பட்டு காகிதத்தை அதின்மேல் இட்டு முறுக்கியவுடனே, காகிதத்தில் அச்செழுத்துக்கள் பதிகின்றன. கடைசியாக காகிதத்தை ஒழுங்காக மடித்து தைத்து புஸ்தகமாகக் கட்டுவிக்கப்படுகிறது. இவைகளில், கந்தைத்துணி முதலியன, இயற்கைப்பொருளாகிற பருத்திச்செடி சணல் முதலியவைகளினின்று ஆக்கப்பட்டவை. அக்கந்தைகளைக் கூழாய்ச்செய்து காகிதமாகச் செய்வது யந்திரமே யாயினும் அவ்வியந்திரச் சாமான் முழுமையும் இயற்கைப் பொருளாகிற இரும்பு முதலிய லோகங்களால் செய்யப்பட்டவை. அந்த யந்திரத்தை உண்டுபண்ணிய மனிதனும் இயற்கைப் பொருளே. அச்செழுத்துக்களைச்செய்யும் யந்திரமும் அச்சடியந்திரமும் மனிதனாலேயே ஆக்கப்பட்டவை. அச்சடித்த காகிதத்தை மடித்து பைண்டு செய்வதும் மனிதன் அல்லது மனிதனால் ஆக்கப்படும் யந்திரமே. விசேஷமாக புத்தக ரூபமாக எழுதப்பட்ட விஷயமும் கிரந்த கர்த்தனாகிய மனிதனாலேயே. ஆகவே புத்தகம் ஒன்று வெளிவரவேண்டுமானால் அநேகம் இயற்கைப் பொருள்கள் அன்னியோன்னியமாய் வேலை செய்யவேண்டிய தவசியப்படுகிறது; அதாவது இயற்கைப் பொருளின்றி செயற்கைப்பொருள் என ஒன்று உற்பத்தியாகவே முடியாது.

இதினின்றும் நாம் அறியும் கருத்து யாது? எல்லாம் இயற்கைப்பொருளேயென்றும் இயற்கைப் பொருளின்றி செயற்கைப்பொருளென நாம் கூறுபவை, இவ்வுலகில் உண்டாகாவெனவும் நாம் செயற்கைப்பொருளாகக் கூறுவனவெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து இயற்கைப்பொருளாகவே காணப்படுமெனவும் அறிகிறோம். மனிதனே இயற்கைப்பொருளாயிற்றே. கடைசியாக சாஸ்திரீக அபிவிருத்திக் கொள்கையின்படி (The Evolution Theory) எப்பொருளும் மனிதனின் அறிவும் அவனால் ஆக்கப்படும் சாஸ்திரீகப்பயிற்சியும் வரவர விருத்தியடைந்துகொண்டே வருகின்றன. அவ்விருத்தியினைப்பற்றி இன்னொருமுறை எடுத்து விவரிப்போம்.

## துக்கம்

### SORROW

ஆனந்தம் அடையவேண்டியே நமது மனம் பெரும்பாலும் சஞ்சலப்படுகிறது. மன சமாதானத்துக்கு எதிர்நிற்கும் தடைகளை நீக்கும் பொருட்டே நாமனைவரும் சதா காலமும் முயற்சிசெய்து வருகிறோம். இவ்விடையூறுகள் பூராய் ஒழியும் காலம் ஒன்றுண்டென்று நாம் திடமாய் நம்பியே வருகிறோம். பொருளாசை பிடித்த ஒவ்வொரு லோபியும் தன் மனம் திருப்தியடையும்படியானதொரு தொகையுண்டென்று நினைத்து நடக்கிறான். அதிகாரவாசை கொண்ட அனைவரும் தம் முயற்சி முடியுந்தருணம் ஒன்று உண்டென்றும், அதன் பின்னர், மிகுந்த தமது வாழ்நாட்களையெல்லாம் சுகானுபவங்களிலும், சன்மார்க்கத்திலும் கடவுள் தியானத்திலும் கழிக்கலாமென்றெண்ணி மனோராஜ்ஜியம் பண்ணி வருகிறார்கள்.

இவ்வாறன்றி, பொய்முடிவுகூட புலப்படாது நம்மை வருத்தும் மனநோய் துக்கம் ஒன்றே எனத் தோன்றுகின்றது. மனதை நடுநிலையில் நிறுத்தும் கடினமான கலையைக் கற்கப் புகுவோர் இதை முக்கியமாய் கவனிக்கவேண்டியது. நமது மனதை வருத்தும் பல வாசைகளாகிய நோய்களுக்கு மருந்துண்டு. பொய்யுற்சாகத்தையாவது அடைந்து அவைகளை மறக்க வழியுண்டு. ஆனால் இயற்கையாய் துக்க நிவர்த்திக்கென்றேற்படுத்தப்பட்ட ஔஷதமொன்றுமில்லை. பெரும்பாலும், துக்கம், மாற்றவொண்ணாத தற்செயல்களால் விளைகிறது. சராசரப் பொருள்கள் தமது நிலைமையை யிழந்ததன் பொருட்டோ, அல்லது மாற்றிய காரணத்தினாலோ, துக்கம் உண்டாகிறது. நாம் பெறமுடியாதென்றறிந்த பொருளை துக்கம் இச்சிக்கிறது; அண்டங்களை அடக்கியாளும் இயற்கையாயமைந்த விதிகளை துக்கம் மாற்ற விரும்புகிறது.

அலக்ஷியத்தினாலும் அறியாமையினாலும் விளையும் கேடுகளை நினைந்து வருந்துவதும், இயற்றிய பாவங்களை எண்ணி மனமழிதலும் துக்கமாகா. முன்னது, முன்னுக்கு அனுபவமும் அறிவும் தரும்; பின்னது, நாம்செய்த கொடிய கிருத்தியங்களை மாற்றாதெனினும், அவைகளின் பாவத்தை விலக்குமோர் பரிகாரமாகவும் சாந்தியாகவும் கடவுள் அதைக் கருதுவார் என்று நம்புகிறோம். மேலும் நமது நடத்தை சீரடையுந்தோறும் அம்மனவருத்தம் குறைந்தொழியும். இவ்வாறு உண்டாகும் விசனம் நற்பயனை யளிக்கும். துக்கத்தின் நிலைமையோவெனின், நோக்கமனைத்தும் சென்ற காலத்தின் மேலூன்றி நிகழுங்காலத்தில் பற்றின்றி,. ஏதோ ஒரு விஷயம் இருந்தவாறன்றி மற்றொருவாறு இருந்திருக்க வேண்டுமென்று சதாகாலமும் எண்ணி, இழந்த பொருளோ, சுகானுபவமோ இப்பொழுது இல்லாததால் மனம் நொந்து ஏங்குவதேயாம். இக்குறையைத் தீர்க்க எவ்வாறு பாடுபடினும் பயனிலது. சிலர், தாம் பல நாளாய் தேடிவைத்த செல்வம் திடீரென்று அழிவதனாலும், இன்னும் சிலர் தாம் சிரமப்பட்டு சம்பாதித்த நற்பெயர் விதிவசத்தால் கெடுவதினாலும், மற்றும் சிலர், தங்கள் பந்துமித்திரர் இறப்பதனாலும் ஆராத் துயரத்திலாழ்ந்து விடுகின்றனர். துர் அதிர்ஷ்டத்தால் இவர்கள் தம் இன்ப உணர்ச்சியையே யிழந்து விடுகின்றனர். தாம் எப்பொருளைக்குறித்து விசனப் படுகிறார்களோ அதற்கு பதிலாய் மற்றெதையும் மாற்றலாகுமென்ற நம்பிக்கையையே அவர்கள் முற்றும் துறந்து விடுகிறார்கள்; தம் வாழ்நாட்களையெல்லாம் மனோவருத்தத்துக்கும் துயரத்துக்கும் இரையாக்கி வீண் வியாகுலத்தினால் உடல் மெலிந்து இறக்கின்றனர்.

இவ்வகையான துக்கம்? அன்பினாலும் அன்னியோன்னியத்தினாலும் இயற்கையாய் உண்டாவது. எவ்வளவு வருத்தந் தரினும், எத்தனை நஷ்டந் தருவதாயிருப்பினும், இத்துயரடையாமலிருப்பது பழிக்கிடமாவது நியாயமே. இவ்வனுசரணையை எல்லா ஜாதியாரிடத்தும், எக்காலத்திலும் காணலாம். சில தேசவிதிகளும் வழக்கங்களும், நெருங்கிய உறவினர் இறந்தால், துக்கத்துக்கு அடையாளமாக சில காலம் வரையில் சில வெளிப்படையான குறிகளை அணியவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கின்றன.

துக்கம் நேசத்தினின்றுண்டானால் சிறிது அளவு மெச்சத்தக்கதென்றும், அறியாமையினின்று விளைந்தால் பரிதபிக்கத் தக்கதென்றும், ஆனால் அதற்கிடங் கொடுத்து அதிகரித்தல் தவறென்றும், சீக்கிரத்தில் வாழ்க்கைக்குரிய தொழில்களுக்கும் பொது ஜனகாரியங்களுக்கும் அத்துயரை அடக்கி நடந்துவர வேண்டுமென்றும் ஜனங்கள் சாதாரணமாய் கூறுவதைக் கேட்கிறோம். ஆரம்பத்தில் துயரை நாம் விலக்க இயலாது. ஆதலால் நாம் இடம் கொடுப்பினும்

கொடாவிடினும், துக்கம் நம்மைப் பற்றுகிறது. ஓர் அளவு வரையில் இத்துயரத்தை, நன்றியறிதல் என்னும் நற்குணத்துக்கும் மதிப்புக்கும் அறிகுறியாகக் கருதலாம். இயற்கை, நம்மை சற்று துயரமனுபவிக்கும்படி கட்டாயப்படுத்துகிறது; மற்றும் சிறிது துக்கம், உலக அபவாதத்தின் பயம் நம்மை வெளியிடச்செய்கிறது. ஆனால் துயரத்தாலுண்டாகும் முதலழுகையையும் விசன குறிகளையும் தவிர்த்து, மிகுந்த துக்கம் பயனற்றது மாத்திரமன்று, குற்றமென்று கூறத்தகும். ஏனெனின், நமது பதவியின் கருமங்களுக்கென்று கடவுள் நமக்கு அளித்திருக்கும் காலத்தை, அன்பின்பொருட்டு பயனற்ற இச்சைகளில் செலவிட்டழிக்க நமக்கு யாதொரு பாத்தியமுமில்லை.

ஆயினும், துக்கம் நியாய வழியிலேயே பற்றி, பிறகு அதைநீக்க முடியாதபடி மனதைப் பந்தப்படுத்துவதை நாம் அடிக்கடி கவனிக்கிறோம். துக்கத்தால் வருமெண்ணங்கள் முதலில் அதிக வலிவுடன் மனதில் பதிந்து, பிறகு நம் இஷ்டத்துடனேயே சேர்க்கப்பட்டு, நம் கவனத்தை முற்றும் கௌவி, பிறகு நம் ஒவ்வொரு எண்ணத்திலும் பரவி நின்று, நம் களிப்பைக் கெடுத்து, புத்தியை மயக்குகின்றன. உலகத்தின் மேல் ஓர்வித வெறுப்பு உயிரையேபற்றிவிடுகிறது. இந்திரியங்களெல்லாம் ஒரு பொருளின் மேலேயே செல்லுகின்றன. அப்பொருளோ, எக்கர்தரும் வருத்தத்துடனன்றி எதைப்பற்றியும் நினைக்க இடந்தாராததாய் விடுகிறது.

இத்தகைய துக்க நிலையிலிருந்து உற்சாகமும், ஊக்கமும் அடைவது துர்லபம். இதன் பொருட்டே, மன ஆரோக்கியத்துக்கு விதிகளை நியமிக்கும் தத்துவபோதகர், நோய்க்கு மருந்தளிப்பதைவிட வியாதியையே விலக்குவது நலம் என்றெண்ணி, நமக்கு நெருங்கிய விஷயங்களில் மனதை பூர்வமாகச்செலுத்தி அளவற்று ஆனந்தம் அருந்தாமலிருக்கவும், நமக்கருகிலிருக்கும் பொருள்களின் மேல் மனம் ஊன்றாதபடி அவைகளை அடிக்கடிமாற்றிவரும்படியாகவும், எப்பொழுதும் நமது மனதை அலக்ஷியம் என்ற நடு நிலையில்வைக்கும் படிக்கும் வற்புறுத்துகின்றனர்.

இவ்விதிக்கிணங்கி நடப்பின், ஒரு வேளை மனச்சமாதானமுண்டாகலாம். ஆனால் ஆனந்தம் ஒருக்காலும் உண்டாகாது. ஒரு மனிதனை நாம் இழந்து விடுவோமோ என்றஞ்சும்படியான அளவு பிரியம் நாம் அவனிடம் வைக்காவிடின், பரோசிந்தை, நம்பிக்கையாகிய இனிய தருமகுணங்களாலுண்டாகும் ஆனந்தத்தை நாம் அடையவே மாட்டோம்; இருதயத்தைக் கரைக்கும் ஆசையையும், உதாரகுணத்தின் உருக்கத்தையும், இன்னும் இயற்கையாய் உற்சாகப்படுத்தும் நற்களிப்பையும் நாம் அனுபவியோம். ஒருவன் தான் பிறரிடம் காட்டும் பிரியத்தைவிட அதிகம் அவர் தன்னிடம் காட்டவேண்டுமென்று விரும்புதல் நியாயமன்றாதலால், நட்பின் மூலமாய் உதிக்கும் கவனத்தையும், பிரியத்தையும் அவன் இழக்க வேண்டியதுதான். நட்பினாலேயே வாழ்க்கையை எளிதாக்கும் இனிய வசனங்களையும் அவன் செவிகள் கேளா. அவனைக்காட்டிலும் அதிக இளக்கமான மனதையுடையவர்கள் அவனை அபிமானிக்காது அலக்ஷியம் செய்வார்கள். ஏனெனில் நாம் எவ்வளவு பிரயாசத்துடன் ஒருவன் நட்பைத் தேடி அவனை நமக்கு கடமைப்பட்டவனாய்ச் செய்யினும், அதற்கு பிரதி அவன் சரியான நடவடிக்கையினின்று நீங்கி, நமக்குச் செய்யும் உபகாரமெல்லாம் அவன் விரோதியாயில்லாதிருத்தலே யென்றால், அவனுடன் யார்தான் நட்பை வளர்த்துவார்கள்?

வாழ்க்கையை நடுநிலையிலும், அலக்ஷியமான சோகத்திலும் கழிக்க யத்தனிப்பது பயனற்றது; அது மடமையே யாகும். சந்தோஷத்தை நீக்குவதால் விசனத்தை விலக்கமுடியாது. இவ்வுண்மை குறிப்புடன் கவனிக்கத்தக்கது. சந்தோஷத்தை முற்றும் அகற்றினும், துக்கம் பல மார்க்கங்களில் வந்து நம்மை வருத்துகின்றனவாதலாலும், மனதைப் பற்றும் இன்பங்களினின்றும் நம் கவனத்தைக்காக்கினும், நம்மைத் தாக்கும் துன்பங்கள் கவனத்தைக் கவர்ந்து கொள்ளுகின்றனவாதலாலும், மனதை அலக்ஷியமான நடுநிலைமையினின்று உயர்த்த முயல்வது அவசியம்.

ஆனால் இடையில் இழந்து விடுவோமோ என்ற பயத்தால் ஆனந்தம் அடையாமலிருக்க முயல்வது மடமையெனினும், நாம் ஒரு பொருளின் உரிமையில் எவ்வளவு சந்தோஷிக்கிறோமோ அதற்கு ஏற்ற அளவு துக்கம் அப்பொருளையிழப்பின் நாம் அடைகிறோம் என்பதற்கு ஐயமில்லை. ஆதலால் இத்தகைய துக்கத்தை துரிதத்துடன்குறைக்கும் வழியைத்தேடுவதே தத்துவ விசாரணையின் முக்கிய நோக்கமாகும். உள்ளத்தை துக்கமாகிய பந்தத்தினின்று நீக்கும்

வழி, விளையாட்டு விநோதங்களில் மனதைச்செலுத்துவதே என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். மற்றும் சிலர், அவ்வாறு திடீரென்று மனதை மாற்றுவது கெடுதலென்றெண்ணி, நமக்கு நேர்ந்ததை விட இன்னும் அதிக கொடியதும் பயங்கரமானதுமான வியாகுலங்களின்மேல் மனதைச் செலுத்தி தேறுதலடைந்து, மெதுவாய் சமாதானப்படுவதே நலமென்றும், நம் துர்அதிர்ஷடத்தின்மேல் தீவிரத்துடன் செல்லும் நமது கவனத்தை மற்றோருக்கு நேர்ந்த பேரிடர்களைப் பற்றி சிந்திக்கச் செய்ய வேண்டுமென்றும் நினைக்கிறார்கள்.

இவ்விரண்டு ஔஷதங்களுள் ஒன்றாவது போதுமானதா என்று சந்தேகிக்க இடமுண்டு. உல்லாசம் என்னும் ஔஷதம் எப்பொழுதும் உட்கொள்ளத் தக்கதன்று. துக்கந்தரும் விஷயங்களின் சிந்தனையோ நம் வியாதியைத் தீர்க்கத் தவிர்ந்தால், உயிரையே மாய்த்துவிடும்.

துக்கம் என்னும் வியாதிக்கு சாதாரணமானதும் நிர்ப்பயமானதுமான பரிகாரம் தொழிலே. போர் வீரர் சண்டையில் நண்பர் இறந்ததன் நிமித்தமாய் ஆற்றொத்த துயரத்தில் ஆழ்வதில்லையென்று கேட்டிருக்கிறோம். பயமற்ற சந்தர்ப்பங்களிலும், வேலையின்றி வீண்காலம் கழிக்கும்போதும் நாம் அனுபவிக்கும் விசனத்தைக் காட்ட அவர்களுக்கு நேரம் வாய்ப்பதில்லை போலும். அவர்கள் தம்மைக் காத்துக்கொள்வதிலேயேசர்வகாலமும்ஜாக்கிரதையாயிருக்கவேண்டியிருக்கிறது. தமது நண்பர் இறந்தாலும் அவர்கள் அதிகமாய்த் துக்கப்பட அவகாசமில்லை. அவ்வாறே ஒருவன் தன் மனதைத் தன் கருமத்தின்மேலேயே கவலையுடன் செலுத்திவரின், யாதொரு வீண் துயரத்துக்கும் காலத்தைப் பறிகொடுத்து மனமழியான். துக்கம் வாழ்க்கையென்னும் தடாகத்தின் மேல் படர்ந்துள்ள பாசத்துக்கு சமானம். அப்பாசம் தண்ணீரைக்கலக்கி யுபயோகித்தாலன்றி நீங்காததுபோல, வாழ்க்கையிலும், காலத்தைக் கருமத்திலேயே செலுத்தி யுபயோகித்து வந்தாலன்றி துக்கம் நிவர்த்தியாகாது.

## மகம்மாரியும்—எலிகளும்

### PLAGUE AND RATS

மகம்மாரியைப்பற்றிய விஷயத்தைக் குறித்து இந்தப் பத்திரிகையில் எழுதுவது தகுமோவென்று சிலர் சந்தேகிக்கலாம். இந்தப் பத்திரிகை விசேஷமாய் ஆங்கிலேய பாஷை கல்லாதவர்களுக்கும், ஸ்திரீ ஜாதிகளுக்கும் பயன்படுமாறே நடந்துவருவதால் அன்னவர்களுக்கும் மகம்மாரியைக் குறித்த விவேகத்தைப் போதிப்பதாகும் இந்த விஷயம்.

பம்பாய் தேசத்தில் 1896ல் மகம்மாரி ஆரம்பமான காலத்தில் அதை ஒரு தொத்து வியாதியென்றும் மகம்மாரியால் பீடிக்கப்பட்டவர்களைத் தொட்ட மாத்திரத்திலாவது அவர்களுடைய காற்றுவாடை வீசின மாத்திரத்திலாவது மற்றவர்களும் பீடிக்கப்படுகிறார்களென்றும் ஜனங்களுள் பெரும்பாலோர்க்கு அபிப்பிராயம் இருந்தது. வரவர இந்த நம்பிக்கை குன்றிவருகின்றது. ஏனெனில் ஒரே வீட்டில் வாசம் செய்யும் ஜனங்களில் சிலர் மகம்மாரியால் மரணமடையவும் மற்றவர்கள் ஒருவித அபாயமுமின்றி ஜீவிக்கவும் பிரத்தியக்ஷமாய் காண்கிறோம். இதன் காரணம் என்னவெனில் மகம்மாரி விஷமானது (Plague Bacilli) ஒரு பிராணியின் உட்சென்று இரத்த சம்பந்தமடைந்தாலொழிய அந்த வியாதி தொடராது. எவரொருவர் அந்த விஷ சம்பந்தத்தை அடையவில்லையோ அவர்களை மகம்மாரி பீடிப்பதில்லை. மற்றவர்களை விஷம் எவ்விதம் தாக்குகிறதென்பதை அடியில் விவரிப்போம்.

நம்மவருள் சிறுவர்முதல் எலிகளைக் காணாதவர்களில்லை. அதாவது, எலி சர்வ சாதாரணமென்றபடி அவற்றைக் கொஞ்சம் ஊகித்துப் பார்க்கில் அநேகவிதம் காணப்படும். அவையாவன:—மூஞ்சூறு, சுண்டெலி, பெருச்சாளி, கருப்பெலி அல்லது வீட்டெலி, ஜலதாரைகளில் வசிக்கும்படியான (Brown) எலி, காட்டில் வசிக்கும்படியான காட்டெலி அல்லது வெள்ளெலி முதலியவைகளே. இவற்றில் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் சம்பந்தமான கருப்பெலி அல்லது வீட்டெலியைப் பற்றி விசாரிப்போம். இவ்வெலிகள் விசேஷமாக நமது வாஸஸ்தானமாகிய வீடுகளின் கூரைகளிலும், சுவற்றின் பொந்துகளிலும், குப்பைமேடுகளிலும், இருட்டறைகளிலும், கெட்டி தளவரிசையில்

லாத வீட்டுகளின் ஈரத்தரையில் துவாரம் செய்து கொண்டும் வசிக்கும். இவைகள் குடும்பம் குடும்பமாக ஒவ்வொரு ஸ்தலத்தில் வசிப்பது வழக்கம். அவைகளுக்குள் ஏதேனும் அசாதாரணமான மரணங்கள் உண்டானாலும் அல்லது வேறுவிதமாக வீட்டாரால் தொந்திரவுநேர்ந்தாலும் மரணமடைந்தவை போக மற்றவை தங்கள் சுயஸ்தானத்தைவிட்டு வேறோரிடத்திற்குக் குடிப்புகும். இதை நாம் வழக்கத்தில் காணலாம். எப்படியெனில் எலிகளைப்பிடிக்கும் பொருட்டுவைத்த பொறிகளில் முதல்ஒன்று அல்லது இரண்டு தினமே எலிகள் விழுகின்றன. பின்னால் எவ்விதமான அவைகளுக்குப் பிரியமான வஸ்துவை பொறிகளுக்குள் வைத்தபோதிலும் அவற்றை யணுகா. எலிகளின் தொந்திரவும் விசேஷமாய்க் காணப்படுவதில்லை. இது எல்லோருக்கும் நன்றாய் தெரிந்த விஷயம். பிடிபட்டுப்போன எலிகளைக் கண்ட மற்ற எலிகள் பயந்து வேறு இடத்திற்கு ஓடிப்போகின்றன. சில காலம் சென்றபின் மறுபடியும் தங்கள் சுயஸ்தானத்திற்குத் திரும்பிவந்து விடும். இப்பேர்ப்பட்ட எலிகளின் பேரில், மற்ற நாய் பூனை முதலியவற்றின் பேரில் இருப்பதுபோலவே, ஒரு விதமானசிறு உண்ணிகள் (Fleas)உண்டு. அவைகள் தான் மகம்மாரி வியாதிக்கு முக்கியமான காரணம். இதைக் கேட்க ஒருவேளை ஆச்சரியமும் நம்பிக்கைக் குறைவும் உண்டாகலாம். அடியில் வரும் விஷயங்களால் உண்மை விளங்கும். இந்த எலி உண்ணிகள் எலிகளின் பேரிலேயே வசிக்குமல்லாமல் மற்ற ஜெந்துக்களின்மேல் அவசியம் நேர்ந்தாலொழிய இருக்கமாட்டா. மேலும் இரத்த ஆகாரமில்லாமல் அநேக நாளும் தங்கமாட்டா. காற்றோட்டம், வெளிச்சம் சூரியவெப்பம் உள்ள இடங்கள் அவற்றிற்கு சத்துரு. ஒரு வீட்டில் மகம்மாரி காண்பதற்குமுன் அதே வீட்டிலாவது சுற்றுப்பக்கங்களிலாவது எலிகள் ஏராளமாய் இறந்து விழுவதைக் காண்கிறோம். எலிகள் விழும் பக்ஷத்தில் மகம்மாரியின் சூச்னை என்று உடனே அவ்வீட்டை விட்டுவிடுவது உத்தமம். ஒரு இடத்தில் மகம்மாரியால் பீடிக்கப்பட்ட எலிகள் மற்ற எலிகளுடன் கலக்குமாகில் அவற்றின்மேலுள்ள உண்ணிகள் மற்றவைகளின்பேரிலும் தாவுகின்றன. மகம்மாரிவிஷ இரத்தத்தால் போஷிக்கப்பட்ட உண்ணிகள் சௌக்கியமான எலிகளைக் கடித்தவுடன் அவற்றிலும் விஷம் ஏறி வியாதியை உண்டாக்குகின்றன. இவ்விதமாகவே ஒன்று பத்து நூறாக வியாதி பரவி, முதலில் எலிகளாகவே மரணமடைகின்றன. இதைக் கண்டவுடன் வீட்டார்கள் ஜாக்ரதையாகவோ தாமதமாகவோ வீட்டை அடைத்துவிட்டு வேறஇடம் செல்லுகிறார்கள். இதன் மத்தியில் இறந்த எலிகள் அவ்வீட்டிலேயே கிடந்துபோகின்றன. இதன் மேலுள்ள உண்ணிகள் இரத்த ஆகாரமில்லாமல் தரையிலூர்ந்து தவிக்கும் காலத்தில் கொஞ்ச காலமாய்விட்டதால் ஜனங்கள் வீட்டைத் திறந்து உட்செல்லுகிறார்கள். உடனே பஞ்சத்திலாழ்ந்து பரிதவிக்கும் உண்ணிகள் தங்களுக்கேற்பட்ட எலிகளல்லாவிடினும் இரத்த அவாவினால் மனிதர்களின் கால்களில் விழுந்து கடிக்கின்றன. அப்படிக் கடிபட்ட ஜனங்கள் மகம்மாரியை அடைகிறார்கள்.

அல்லாமல் வேறு விதங்களில் வியாதியடைதலுமுண்டு. மகம்மாரி வியாதியால் வருந்தும் ஒருவனுடைய வஸ்திரங்களில் இந்த உண்ணிகள் ஒட்டியிருந்து சௌக்கியமாயுள்ளவர்கள் மேல் பாய்வதும் உண்டு. அல்லது மகம்மாரி கண்ட எலிகள் நெல் மூட்டை முதலான சாமான்களின்பேரில் சஞ்சரிக்கும்போது உண்ணிகள் உதிர்ந்து வீடுகளில் பரவியோ அல்லது அந்தச்சாமான்களைக் கையாடும்பொழுதோ மனுஷ்யர்களின் பேரில் பாய்ந்து அவர்களுக்கு வியாதியையுண்டாக்குவதும் உண்டு. எவ்விதத்திலும் மகம்மாரி வியாதி இந்த உண்ணிகள் மூலமாகவே ஜனங்களை யடைகிறது. இது விஷயம் விசேஷமாய் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் இவ்விடம் எடுத்துக் கூறின் வளரும்.

மேற்கண்ட விஷயங்களால் என்ன ஏற்படுகிறதென்றால் பூலோகத்தில் எலிகளே இல்லாவிடில் மகம்மாரி வியாதி ஜனங்களை அடுக்காது என்பதேயாம். இது சாத்தியமோ வெனின் அசாத்தியமே. ஆனாலும், கூடுமானவரை பிரயத்தனப்பட்டு எலிகளை நமது வாசஸ்தானங்களினின்றும் ஓட்டிவிடலாம். இதற்காக நாம் செய்யவேண்டுவ தென்னவெனில் எலிகள் சாதாரணமாய் இருட்டறைகளிலும், ஓதமுள்ள வீட்டுத் தளங்களிலும், குப்பை மேடு முதலான இடங்களிலும் வசிக்கும் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அதன்மேல் வளரும் உண்ணிகளும் அப்பேர்ப்பட்ட இடங்களிலும் காற்றோட்டமில்லாத இடங்களிலும் ஏராளமாய் ஜீவிக்கும் என்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே நம்மவர்

ஒவ்வொருவரும் பிரயத்தினம் செய்யவேண்டுவது என்னவெனின், நாம் வசிக்கும் வீடுகளை சுத்தமாயும் யதேஷ்டமான காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளதாயும், குப்பை முதலிய அசுத்த வஸ்துக்களை வீட்டுகளின் அருகாமையில் சேர்க்காமலும், வீடுகளின் தளங்களை செங்கல்லோ கருங்கல்லோபரப்பி ஈரமில்லாமலும், வீட்டைச்சுற்றிலுமுள்ள ஜலதாரைகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளவும்வேண்டும். இப்படிச் செய்வதனால் எலிகளுக்குத் தங்க இடமற்றுப் போய்விடுகிறது. மேற்கூறியவற்றை ஒருவீட்டில்மாத்திரம் அனுசரித்து அண்டை வீடுகளில் அனுசரிக்காமல் இருப்பின் அதனால் உண்டாகும் பிரயோஜனம் ஒன்றுமேயில்லை யென்று சொல்லலாம். ஒவ்வொரு கிராமத்திலோ பட்டணத்திலோ உள்ள ஒவ்வொரு வீட்டாரும் இதையனுசரித்து வருவாராயின் எலிகளை ஊரிலேயே தங்கவிடாமல் செய்துவிடலாம். மகம்மாரியும் அணுகாது. இதுவே முக்கியமான விஷயம். வீடுகளில் பூனைகளை வளர்ப்பதும் பயன்தரும். நமது இராசாங்கத்தார் எலிகளை நாசம் செய்யும் பொருட்டு ஏராளமான திரவியம் செலவு செய்துவந்தார்கள். இன்னும் செலவு செய்கிறார்கள். மகம்மாரி வியாதிமட்டும் இந்தியாவைவிட்டு விலகவில்லை. காரணம்? இராசாங்கத்தாருடன் ஜனங்களும் ஒத்து இது காரியத்தில் முயற்சி செய்யாமையேயாம். 1906—1907 ஷுங்களில் இக்கடிதக்காரர் பர்மாதேசத்தின் பிரதான நகரங்களுள் ஒன்றாகிய மாண்டலே நகரத்தில் இருந்தபொழுது சாகடித்த எலி ஒவ்வொன்றிற்கும் இராசாங்கத்தார் அணா இரண்டு விழுக்காடு கொடுத்துவந்தார்கள். இதை யறிந்த ஒரு ஏழை பர்மன் (Burman) தன்னுடைய குடும்பத்தோர் எல்லோரையும் எலி சேகரிப்பதில் நிர்ணயம் செய்து ஆங்காங்கு குப்பை வண்டிக்காரர்களும் மற்றவர்களும் கொண்டுவரும் எலிகளை ஒவ்வொன்றிற்கு அரையணாகொடுத்து வாங்கி அவற்றை முனிஸிபால்ட்டியில்சேர்த்து பணம் சம்பாதித்துவந்தான். இது நல்ல இலாபம் கொடுக்கக்கூடிய வியாபாரமாகத் தோன்றியதால் எலிகளைச் சேகரிக்கச் சில வேலைக்காரர்களையும் நியமித்தான். நாளாவர்த்தியில் நாளொன்றுக்கு 400 முதல் 500 எலிகள் வரை இவனிடமிருந்துமாத்திரம் முனிசிபல் கணக்குக்கு வரும். பணமும் சென்றுவந்தது. முனிசிபல் தொகையும் குறைந்தது. பர்மன் செல்வவானானான், மகம்மாரி வியாதி மாத்திரம் அடங்கவில்லை. ஆழ்ந்து விசாரிக்குமளவில் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களில் இருந்து மேற்சொன்ன பர்மன் எலிகளை கொண்டுவருவதாகவும் நகரத்திற்குள் உள்ள எலிகள் சொற்பமே நாசம் செய்யப்படுவதாகவும் தெரியவந்தது. இந்தப் பர்மன் திரவியம் சேகரிப்பதில் எடுத்துக்கொண்ட முயற்சியில் ஆயிரத்திலொரு மடங்கு ஒவ்வொரு வீட்டாரும் எலிகளை நாசம் செய்வதில் எடுத்துக்கொண்டிருப்பாராயின் பயன் வேறாய் முடிந்திருக்கும். ஆதலால் எலிகளை கொன்று கருவறுக்கலாம் என்பது அசாத்தியமான காரியம். எலிகளிலிருந்து உதிரும் உண்ணிகள் விசேஷமாய்த் தரையிலேயே சஞ்சரிப்பதால், தரையில் அடிக்கடி வசம்புஜலத்தை தெளிப்பதால் உண்ணிகளை அணுகவொட்டாமல் செய்யலாம் என்பது சிலருடைய அபிப்பிராயம். இரண்டொரு வருஷத்திற்குமுன் மகம்மாரிகண்ட வீடுகளைச் சுத்தம்செய்ய உபயோகித்துவந்த மருந்துகள் யாவும் பயனற்றவையென்று தெரிந்து தற்காலத்தில் கிரோசின் ஆயில் (Kerosine Oil) என்று சொல்லக்கூடிய மண்ணெண்ணெயை சவுக்காரத்துடன் சேர்த்து ஜலம் கலந்து வீடுகளை சுத்தம் செய்கிறார்கள். இந்த இமல்ஷன் (Emulsion) எலி உண்ணிகளை அணுகவிடாது நாசம் செய்கிறதாம். இது தற்கால பண்டிதர்களின் ஆராய்ச்சி நிர்ணயம்.

பி. கே. வெங்கடேச ராவ்.

---

தரித்திரத்தின் கொடுமை:—எப்பொழுது ஒரு மனிதனுக்குத் தரித்திரம் வருகிறதோ அப்பொழுது அதனுடன் வெட்கமும் வந்து விடுகிறது. எப்பொழுது வெட்கம் வந்ததோ அப்பொழுது முகத்தின் களை அவனுக்குக் குன்றும். களை எப்பொழுது குறைந்ததோ அப்பொழுது போகிறவிடத்தில் அவனுக்கு அவமானம் நேரிடுமென்பதில் என்ன சந்தேகம்; அவமானம் எப்பொழுது வந்ததோ அப்பொழுது துக்கமும் உடனேவரும்; மனதுக்கு எப்பொழுதுதுக்கம் வந்ததோ அப்பொழுது புத்தி குறையும்; புத்திகுறைந்தால் நாசம் உடனேவரும்; ஆகையால் தரித்திரம் ஒரு மனிதனை என்ன கஷ்டதிசையிற்தான் கொண்டுவந்துவிடாது; நாளைப்பொழுது நமக்கு யார்கொடுப்பார்கள் ஈசுவரா என்று ஒரு மனிதனை தரித்திரமானது எப்பொழுதும் சிந்தைப் பட்டுக்கொண்டிருக்கச் செயயும்; நம்மை மதித்துப் பேசினவர்கள் தரித்திரம் வருங்காலத்தில் எட்டியே பார்க்கமாட்டார்கள். ஒருவனை நாமாகவே பார்க்கப்போனால் என் இவன் அடிக்கடி வந்து தொந்தரைபண்ணுகிறானென்று அவன் மனதில் அருவருப்புக் கொள்வான். நமதுசொந்த ஜனங்கள்—பெண்சாதி பிள்ளைகளும் நம்மைக் கடுகடுப்பார்கள். எல்லாவற்றையும் விட்டு விட்டு காட்டுக்குப்போய சுகமமாயிருக்கலாமா என்ற புத்தியுந்தோன்றும். முதலில் அவனுக்கு சிநேகிதர்களாயிருந்தவர்கள் எல்லாரும் அவனுக்குத் தரித்திரம் வருங்காலத்தில் சத்துருக்களாய் விடுவார்கள். பிறர் செய்த குற்றம் தரித்திரன் தலையில் வந்து விடியும்.

# இயற்கை அற்புதங்கள்

## WONDERS IN NATURE

### XI. வாயுவிலுள்ள தண்ணீரும் அதன் ரூபாந்திரங்களும்

### THE MOISTURE IN THE AIR

வாய் அகன்ற பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீரை வைத்தால் அது நாழிகையாக ஆகக் குறைந்து முடிவில் காணாமல்போகின்றது. இதுபோலவே ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீரை எடுத்து கொதிக்கவைத்தால், கொதிக்கக்கொதிக்க தண்ணீர் குறைந்து கொண்டுவந்து முடிவில் தண்ணீர் கொஞ்சம்கூட இல்லாது வற்றிப்போகின்றது. இந்தத் தண்ணீர் நீர் ஆவிப்புகையாகி உயரக்கிளம்பி வாயுவில் மறைவதைப் பின்குறிப்பித்த தண்ணீர் கொதிக்க வைக்கும் சோதனையில் கண்ணாரக்காணலாம்; முன்குறிப்பித்த சோதனையில்காண்பது அரிது. நல்ல குளிர்காலங்களில் காலையில் பாத்திரங்களில் இருக்கும் தண்ணீரிலிருந்து நீராவிப்புகை கிளம்பி வாயுவில் மறைவதைக் காணலாமேயொழிய மற்றைய காலங்களில் இவ்வாறு காணமுடியாது. இம்மாதிரி மறையும் உலகிலிருக்கும் தண்ணீர் எல்லாம் அப்படியே போய்விடுகின்றனவா? அல்லது வாயுவில் காணப்படுகின்றனவா? என்ற கேள்விகள் பிறக்கும். இந்த தண்ணீர் வாயுவில் தங்கிநிற்கும் ரூபாந்திரங்களை நல்ல சோதனைகள் மூலமாக நன்கு விளக்குவோம்.

ஆகாயம்நோக்கி கிளம்பும் நீராவி பூமியைவிட்டுப்போய்விடுவதில்லை, வாயுவிலேயே அநேக உருவங்கள்தாங்கி அது இருக்கின்றது. முதலில் நீராவியாகி வாயுவுள் மறையும் தண்ணீர் நம்மைச்சுற்றிக் கண்ணுக்குப் புலப்படாத ஆவியாகவே இருக்கின்றது. இது நமக்கு நன்றாக விளங்கப் பின்வரும் சோதனையைச் செய்வோம். ஒரு வெண்கலப் பாத்திரத்தை நன்றாகக் கழுவித் துடைத்துவிட்டு அதனுள் கொஞ்சம் பனிக்கட்டிகளை உடைத்துப் போடுவோம். உடனே அதன் வெளிப்பாகம் மங்கலாகும். நாழிகையாக ஆக அதன் வெளிப்புறத்தில் சிறு தண்ணீர்த்துளிகள் உண்டாக வரவர அவைகள் பெரிதாகிக்கொண்டே வந்து முடிவில் வெளிப்புறம் தண்ணீர் வழிந்தோடும். இங்கு உள்ளிருக்கும் தண்ணீர் வெண்கலப்பாத்திரத்தின் வழியாக வெளிவந்துவிட்டது என்று சொல்ல இடமில்லை, ஏனெனில் வெண்கலப் பாத்திரத்தில் ஓட்டைகளே இல்லை. வெண்கலத்திலிருந்து தண்ணீர் வர இடமும் இல்லை. ஆதலால் தண்ணீர் சுற்றுமுள்ள வாயுவிலிருந்துதான் வந்து குளிர்ந்த வெண்கலப் பாத்திரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும்; எப்படி அதிக உஷ்ணத்தால் தண்ணீர் நீராவியாகி மறைகின்றதோ அப்படி நல்ல குளிர்ச்சியால் அந்த நீராவி தண்ணீர்த் துளியாகிவிடுகின்றது. இதற்கு உதாரணம் நாம் வெளியே மூச்சு விடுங்கால் நமது வாயிலிருந்து நீராவி வருகின்றது. அது கண்ணுக்குப் புலப்படாதிருக்கின்றது. பனிநாள்களில் காலை அது சுற்றுமுள்ள குளிர்ச்சியால் சிறு தண்ணீர்த்துளிகளாக்கப்பட அது புகையாக நமது வாயிலிருந்து வருவதைப் பார்க்கலாம். ஸாதாரண நாள்களில் அது வருவதைப் பார்க்க வேண்டுமானால் கண்ணாடி அல்லது கற்பலகை ஆகிய இவைகளின் மேல் மூச்சைவிட்டால் நமது வாயிலிருந்து நீராவி அவைகளில் மேல் நீர்த்துளிகளாகி அவைகளை மங்கும்படி செய்து நனைக்கின்றது. இதுபோல வெண்கலப் பாத்திரத்துள் போடப்பட்ட பனிக்கட்டியால் பாத்திரத்தின் வெளிப்பக்கம் மிகுந்த குளிர்ச்சியை அடைய அந்தப் பாகத்தைச் சுற்றி இருக்கும் வாயுவிலுள்ள கண்ணுக்குப் புலப்படாத நீராவி சிறு தண்ணீர்த்துளிகளாக்கப்பட்டு வெண்கலப் பாத்திரத்தின் வெளிப்புறத்தில் வந்து அமருகின்றது. இதனால்தான் முற் கூறிய தண்ணீர் வழிந்தோடும் தோற்றம் உண்டாகின்றது. இந்தச் சோதனையிலிருந்து நம்மைச் சுற்றியுள்ள வாயுவுள் தண்ணீர் நீராவி ரூபமாகி மறைந்து கிடைக்கின்றது என்பது வெளியாகின்றது.

இம்மாதிரி மறைந்து கிடக்கும் நீராவி பூமியில் இருக்கும் சீதோஷ்ண ஸ்திதி, வாயுவிலிருக்கும் சீதோஷ்ண ஸ்திதி ஆகிய இவைகளால் வெவ்வேறு ரூபங்களாக காணப்படுகின்றது. அவையாவன, புகைப்பனி, மூடுபனி, பனி, மேகம், மழை, ஆலங்கட்டி, என்றும், மிகுந்த குளிர்ச்சியாயுள்ள வடக்குப் பாகங்களில் பனிமழை, பனி ஏடு என்றும் எட்டு ரூபங்களாகக் காணப்படுகின்றது. இவைகளை முறையே எடுத்து விவரிப்போம்.


பகல் முழுவதும் ஸூர்யன் நன்றாகக் காய்ந்து கொண்டிருந்தால் அதன் வெப்பத்தால் பூமியின் மேல் பாகத்திலுள்ள நீர் நிலைகளிலிருக்கும் தண்ணீரிலிருந்து நீராவி கிளம்பி வாயுவில் மறைந்து கிடக்கும். ஸூர்யஸ்தமனமாகி இரவு நிர்மலமாக இருந்தால் இரவு பன்னிரண்டு மணிக்குள் பூமி நன்றாகக் குளிர்ந்துவிட முன்கூறிய வெண்கலப் பாத்திரப் பனிக்கட்டிச் சோதனையில் முதலில் கண்டபடி இங்கும் புகைப்பனி உண்டாகின்றது. பூமி அதிகமாகக் குளிர்ந்துவிட்டால் அந்த சீதளம் வாயுவில் கொஞ்சம் உயரம்வரை தாக்க புகை ரூபம் அதிகமாகி ஆகாயத்தில் கொஞ்ச உயரம்வரை பரவி அடர்த்தியாகக் காணப்படும். இதற்கே மூடுபனி என்று பெயர். பூமியின் குளிர்ச்சி இன்னும் அதிகமாகிவிட்டால் வாயுவில் மறைந்துகிடக்கும் நீராவி (வெண்கலப் பாத்திர பனிக்கட்டிச்சோதனையில் இறுதியில் மாறியதுபோல) பெரிய துளிகளாக மாற பூமி மட்டத்தில் இருக்கும் மிகக்குளிர்ந்த பாகமாயுள்ள செடி, மரம், புல் ஆகிய இவைகளின் இலைகள்போன்றவைகளின்மேல் வந்து அமருகின்றது. இது பூமிமட்டத்தைச் சுற்றியிருக்கும் வாயுவிலேயே உண்டாகும் மாறுதலாகையால் மழையைப்போல விழாது, அதாவது பெய்யாது குளிர்ந்தபாகத்தில் தண்ணீர்த்துளிகள் ரூபமாக அமருகின்றது. இதற்கே பனித்துளி என்று பெயர். மிகுந்தகுளிர்ச்சியான பூமியின் வடபாகங்களில்பூமி, தண்ணீர் பனிக்கட்டியாக மாறும் அளவுக்கு மேற்பட்ட குளிர்ச்சியை அடைந்துவிட, பனித்துளி உண்டாகி இலைகளில் அமருவது போல, பனியேடுகள் பூமிமட்டத்தில் உண்டாகி செடி கொடிகளை மறைக்கின்றன. இந்த ஏடுகளால் மறைக்கப்பட்டு அடியிலுள்ள செடிகொடிகள் வெளியிலிருக்கும் அதிகக் குளிர்ச்சியால் பாதிக்கப்படாது காப்பாற்றப்படுகின்றன. இம்மாதிரி நான்கு ரூபமாக வாயுவிலுள்ள நீராவி பூமியில் அருகாமையில் காணப்படுகின்றது.

இனிமேல் வாயுவின் மேல்பாகமாகிய ஆகாயத்தில் காணப்படும் நீராவியின் தோற்ற பேதங்களை எடுத்து விவரிப்போம். பூமியிலுள்ள ஸமுத்திரம், ஏரி குளங்கள் முதலிய நீர்நிலைகளிலிருந்து ஸூர்ய வெப்பத்தால் தண்ணீர் ஆவியாகின்றது. உடனே, இது லேசாகப்போக ஆகாசத்தில் கிளம்பிவிடுகின்றது. மேலே போகப்போக குளிர்ச்சியான பிரதேசங்களாக இருப்பதால்* நீராவி மெதுவாக சிறுதுளியாக புகைரூபமாகின்றது. இதுவே மேகம் எனப்படும். இம்மாதிரிமேகம் ஸூர்யன் பிரகாசிக்குங்கால்தான் ஏராளமாகக் காணப்படும். ஸூர்யஸ்தமனமாகிவிட்டால், பூமிமட்டத்திலிருந்து மேலேசென்று இவைகளை கீழே இறங்கவொட்டாமல் தடுத்துக் கொண்டிருந்த நீராவி ஓட்டம் நின்றுவிடும். உடனே இம்மேகங்கள் கீழே இறங்கி வாயுவின் உஷ்ண பாகங்களுக்கு வர நீராவி ஆகி மறைந்துவிடும். இது பூமிமட்டத்தில் உண்டாகும் புகைப் பனிபோல ஆகாயத்தில் உண்டாவது.

இம்மாதிரியான மேகங்கள் காற்றால் தள்ளப்பட்டு மலைச்சாரல் மேலேறியோ அல்லது மேலே மிகுந்த புதிய குளிர்காற்றால் தாக்கப்பட்டோ அதிகமாகக் குளிர்ந்துவிட்டால் பெரிய தண்ணீர்த்துளிகளாகி கருத்த வர்ணத்தை அடைந்து நீருண்ட மேகங்கள் ஆகின்றன. இவைகள் பூமி மட்டத்தில் உண்டாகும் மூடுபனிக்கு ஸமானமானவை. இவை ஸூர்யாஸ்தமனத்தின் பின்மறையா. இவைகளே ஆகாயத்தில் உயர்த்தப்பட்டாவது அல்லது குளிர் காற்றில் அகப்பட்டாவது மிகுந்த குளிர்ச்சியடைந்தால் தண்ணீர் துளிகளாகின்றன. இத்துளிகள் பூமி மட்டத்தில் உண்டாகும் பனித்துளிகளைப் போன்றன. இவை ஆகாயத்தில் உண்டாவதால் ஆதாரமற்றவையாய்ப் போக மழையாகப் பூமியில் பொழிகின்றன. முன்னர் பனித்துளிகள் உண்டாகும் விதத்தை ஓர் சோதனை மூலமாக விளக்கியதுபோல மழையுண்டாகும் விதத்தையும் ஓர் சோதனை மூலமாக விளக்குவோம்.

இங்குகாட்டப்பட்டிருக்கும் சித்திரத்தைப் பாருங்கள். இதில் ஓர்புறத்தில் ஓர்முக்காலியிட்டு அதன்மேல் ஓர் இரும்பு வலை வைத்து அதன்மேல் ஓர் கண்ணாடி உருண்டைக்குவளை வைத்திருக்கிறது. அந்தக் குவளையின் வாய் இரண்டு துளைகளை உடைய சடை ஒன்றால் மூடப்பட்டிருக்கிறது. வலதுபுறம் உள்ள ஓட்

* பூமியைவிட்டு மேலேபோகப் போக குளிர்ச்சியாய் இருப்பதற்குக் காரணம் என்ன என்ற சங்கை பிறக்கலாம். இரண்டிடத்திலும் ஸூர்ய வெப்பம் ஒரேமாதிரியாக வந்து தாக்குகின்றது. ஆனால்காற்று அமுக்கிச் சிறிதாக்கக்கூடிய வஸ்துவானதால் பூமியின் அடிபாகத்தில் காற்று அடர்த்தி அதிகம், மேலே குறைவும். மேலும் காற்றின் வழியாக எளிதில் உஷ்ணம் வெளிபோகாது. ஆதலால் பூமி மட்டத்தில்வந்து தாக்கும் உஷ்ணம் மேல்பாகத்தில் வந்துதாக்கும் உஷ்ணத்தைப்போல எளிதில் வெளி ஏறுவதில்லை. ஆதலால் பூமியின்மட்டம் உஷ்ணமாயும், மேல் போகப்போக குளிர்ச்சி அதிகமாயும் காணப்படுகின்றது.



டையின் வழியாக ஓர் வளைக்கப்பட்ட கண்ணாடிக் குழாய் வெளிவருகின்றது. அதன் உள் நுனி உருண்டைக் குவளையில் உள்ள உப்புத்தண்ணீருள் மூழ்கி இருக்கின்றது. இடதுபுறம் உள்ள துளையின் வழியாகவும் ஓர் வளைந்த கண்ணாடிக்குழாய் போகின்றது. இதன் வெளி நுனி வலதுகுழாயின் வெளி நுனிபோலவே இருக்கின்றது. இதன் உள் நுனியோ சடையின் உட்பாகத்தின் அருகாமையில் குவளை மேல்பாகத்திலேயே நின்றுவிடுகின்றது. இதன் வெளி நுனி இரும்புவளையத்தில் நிற்கும் ஓர் வெங்கலப்பாத்திரத்தின் பக்கத்தில் நிற்கின்றது. இந்தவெங்கலப்பாத்திரத்தின் நேரே கீழே ஓர் வளையத்தில் ஓர் பீங்கான் இருக்கின்றது. இவ்வெங்கலப் பாத்திரத்தின்மேல் இடது புறத்தில் ஓர் வளையத்தில் ஓர் பெய்குழல் இருக்கின்றது. அதிலிருந்த வெங்கலப் பாத்திரத்துள் ஓர் (ரப்பர்) குழாய் வந்து சேருகிறது. வெங்கலப் பாத்திரத்திலிருந்து ஓர் கண்ணாடிக்குழாய் அடியில் இருக்கும் தண்ணீர் நிறைந்த தொட்டியுள் போகின்றது.

இப்பொழுது சாராய விளக்கால் உப்புநீர் இருக்கும் குவளையைச் சுடவைப்போம். தண்ணீர் கொதிக்கத் தொடங்கியதும் இடதுவளைந்த குழாய் மூலமாக நீராவி வெளியேறி வெங்கலப் பாத்திரத்தில் வந்து தாக்கும். இதற்குள் வெங்கலப் பாத்திரத்தைத் தண்ணீரால் நிறைத்து அதிலிருந்து வெளிவரும் குழாய் வழி பாத்திரத்தின் அடியில் நீராவியால் உஷ்ணப்படுத்தப்படும் தண்ணீரை வெளி எறும்படி செய்வோம். மேலிருக்கும் பெய்குழலுள் ஜாக்கிரதையாக தொட்டியிலிருந்து தண்ணீர் ஓர் கண்ணாடிப் பாத்திரத்தில் மொண்டு விடுவோம். வெங்கலப் பாத்திரம் நிறைந்து தண்ணீர் அடியிலுள்ள பீங்கானில் வழிந்துவிடக்கூடாது. இவ்வாறு ஜாக்கிரதையாகச் செய்து வருவோமாகில் வெங்கலப் பாத்திரத்தின் அடியில் உஷ்ணப்படுத்தப்படும் தண்ணீர் வெளியே கொண்டுபோகப்படும். குளிர்ந்த நீர் பெய்குழலிலிருந்து பாத்திரத்தில் விழுந்து வெங்கலப் பாத்திரத்தின் அடிப்பாகத்தை ஸதா குளிர்ச்சியாக வைத்துக்கொண்டிருக்கும். அப்பொழுது அந்தப் பாத்திரத்தின் வெளி பாகத்திலிருந்து தண்ணீர் துளிகள் பீங்கானில் விழுவதைக் காணலாம். இவ்வாறு கொஞ்சகாழிகை செய்துவந்தால் பீங்கானில் கொஞ்சம் தண்ணீர் துளிதுளியாக விழுந்து சேர்ந்துவிடும். இப்பொழுது விளக்கை நிறுத்திவிட்டு பீங்கான் ஜலத்தை ருசி பார்த்தால் அதில் உப்பேஇராது. மேலும் அதை கண்ணாடி சோதனைக் குழாயுள் விட்டுப் பார்த்தால், மழை ஜலம் எவ்வாறு ஸ்படிகம் போல ஸ்வச்சமாக இருக்குமோ அவ்வாறு அதுவுமிருக்கும்.

இந்தச்சோதனை மழை ஆகாயத்தில் உண்டாவதை நன்கு விளக்குகின்றது. கண்ணாடி விளக்குதான் ஸூர்யன். உருண்டைக்குவளையில் இருக்கும் உப்பு நீர்தான் ஸமுத்திரம். ஸதா குளிர்ச்சியாக வைத்திருக்கப்படும் வெங்கலப்பாத்திரம் தான் குளிர்ச்சியான வாயுவின் மேல்பாகம் அல்லது மலைச்சாரல். பாத்திரத்தின் வெளிப்புறம் உண்டாகும் நீர்த்துளிகள்தான் நீர் கொண்டமேகம். பீங்கான் தான் பூமி. அதில் நீர் துளிகள் விழுவதுதான் மழை பெய்தல். இதில் வரும் தண்ணீர் எவ்வாறு ஸ்வச்சமாயும் உப்பே இல்லாததாயும் இருக்கின்றதோ அவ்வாறேதான் மழையிலும் இருக்கின்றது. ஸமுத்திர நீர், நீராவியாவதால் அதனோடு உப்பு செல்வதில்லை. மறுபடியும் குளிர்ச்சியால் இந்த ஆவியிலிருந்து உண்டாகும் தண்ணீரே மழையாகப் பொழிவதால் அந்தமழை நீரில் ஸமுத்திர உப்புக்காணப்படுவதில்லை. தண்ணீர் ஸ்வச்சமாகவும் இருக்கின்றது. இந்த ஞானத்தால்தான் கப்பல் யாத்திரை செய்ப

வர்கள் தண்ணீர் குறைந்த கஷ்டகாலத்தில் குடிக்க ஸமுத்திர நீரைத் தகுந்த கருவிகள் மூலமாகக் காய்ச்சி ஆவியாக்கிப் பின்னர் குளிரவைத்துத் தண்ணீராக்குகின்றனர். *

பூமியிலிருந்து மேலேகிளம்பும் நீராவிகாற்றால் இமயமலைச் சிகரம் (கௌரீ சங்கரம்என்றகொடுமுடியின் உச்சி) போன்ற அதிக உயரம் கொண்டு போகப் பட்டால் நீராவி அங்குள்ள குளிர்ச்சியால் தண்ணீராகி முடிவில் பனிக்கட்டியும் ஆகின்றது. தக்ஷிணம் முதலிய பாகங்களைப் போன்ற விடங்களில் மேலே கிளம்பும் நீராவி சுமார் ஐந்து மையிலுக்குமேல் போனால்தான் பனிக்கட்டியாகும். நல்ல நிர்மலமான ஆகாயத்தில் இரவிலாகட்டும் பகலிலாகட்டும் தனிமையாக இரண்டொரு மேகப்பொட்டுக்களை நாம் அநேகம் தரம் கண்டிருக்கலாம். அவைகளே மிகுந்த உயரத்தில் உண்டாகும் பனிக்கட்டிகளாக இருக்கலாம். ஐரோப்பாவிலுள்ள ஆல்பஸ் மலை, பூமியின் வடபாகங்கள் ஆகிய இந்தக் குளிர்ந்த இடங்களில் பூமிமட்டத்திலே அதிகக் குளிர்ச்சி இருக்கும் இவ்விடங்களில் சில ஸமயங்களில் மழை போல பனிகட்டிமழை பெய்வது வழக்கம். இவைகளில் பிரயாணி புதைந்துபோக அந்தப் பாகங்களில் பரோபகாரார்த்தமாகவிருக்கும் ஸந்யாஸிகள் தமது கூறிய புத்தியுள்ள நாய்கள் மூலமாக அவர்களைக் கண்டெடுத்துக் காப்பாற்றுவது வழக்கம். இப்பனி மழைகளில் சிற்சில ஸமயங்களில் பனி ஏடு ஏடாக தகடுரூபமாக விழும். அவைகளை எடுத்து நோக்கில் விசித்திர புஷ்பரூபமாக விருக்கும். இப்பனி மழை முற்கூறியதாகிய பூமி மட்டத்தில் உண்டாகும் பனியேபோல ஆகாயத்தில் உண்டாவது. பனி மழையே ஸாதாரண மழைபோன்றது.

இம்மாதிரி பனிக்கட்டி மழை பூமியின் உஷ்ணபாகங்களில் அபூர்வமாக உண்டாகும். இவைகளுக்கு ஆலங்கட்டி மழை என்று பெயர். இம் மழை எப்பொழுதும் இடி மின்னலோடே தான் அடிக்கடி நமது பிரதேசங்களில் உண்டாகும். நமது தேசத்தில் ஐந்து மைலுக்கு மேல் உண்டாகும் பனிக்கட்டி தாமாக கீழே கட்டியாக இறங்கமுடியாது. வரவர உஷ்ணம் அதிகமாவதால், கீழே இறங்க இறங்க அவை தண்ணீராக மாறிப் பின்னர் ஆவியாகி மேலேயே மறைந்து போம். இவைகளை மின்னல் தனது சக்தியால் பிடித்து மேலிருந்து தள்ள, உருகிக்கொண்டே இக்கட்டிகள் பூமியில் விழுகின்றன. இக்கட்டிகளை நாம் அஜாக்ரதையாக எடுத்து வாயில் போட்டுக்கொள்ளுவோமாகில் அதற்குள் இவை தண்ணீராகிவிடும். இம்மழைக்குக் கல்மழை என்ற பெயரும் உண்டு. இவை கட்டியாக விழுவதாலும், கூரையில் கல் எறிந்தால் உண்டாகும் சப்தத்தை இம்மழை உண்டாக்குவதாலும் இவைகளுக்கு இப் பெயர் வந்திருக்கலாம்.

இனி வாயுவில் காணப்படும் தண்ணீரின் ரூபபேதங்களைச் சுருக்கிச் சொல்லுவோம்.

தண்ணீர் முதலில் நீராவியாகி ஆகாயத்தில் கிளம்புகிறது. அது கண்ணுக்குப் புலப்படாது. அதன்ரூபபேதங்களை பின்வரும்கட்டத்தில் காண்க.

* இந்தச் சோதனைக்கும் இயற்கைக்கும் ஓர் வித்யாஸம் உண்டு. அதை அவசியம் கவனிக்கவேண்டும். ஸூர்யன் ஸமுத்திர ஜலத்தை மேலே இருந்து ஆவியாக்குகிறது. சோதனையில் சாராய விளக்கு கீழே இருந்து உப்பு நீரை ஆவியாக்குகிறது. கடவுள் ஸூர்யனை மேலே வைத்திராமல்போனால் ஸமுத்திர ஜலம் எல்லாம் வெகு சீக்கிரம் ஆவியாகிவற்றிவிடும். உலகம் தவிக்கவேண்டிவரும். ஏனெனின் தண்ணீரை மேலிருந்து உஷ்ணப்படுத்துவது மிகக்கடினம்; கீழே இருந்து உஷ்ணப்படுத்துவது மிக எளிது. மேலே இருந்து ஸூர்யன் செய்யும் வேலையால் உண்டாகும் மழையை ஒவ்வொரு ஸமயங்களில் தாங்கவே முடியாமலிருக்க ஸூர்யன் ஸமுத்திரத்தை அடியிலிருந்து உஷ்ணப்படுத்துமாயின் உலகம் அதிக மழையாலும் வருந்தவேண்டி வரும் என்பதற்கு என்ன ஸந்தேகம். கடவுளது செயலின் உபயோகத்தைப் பாருங்கள்!

## தண்ணீரின் ரூபபேதங்கள்

| எ. | தங்கும் பாகம். | ஸாதாரணக் குளிர்ச்சி. | தண்ணீராவது. | கட்டியாவது. |
|---|---|---|---|---|
| 1. | பூமி மட்டம் அல்லது வாயுவின் கீழ்ப்பாகம். | புகைப்பனி. மூடுபனி. | பனித் துளிகள். | பனி ஏடு. |
| 2. | வாயுவின் மேல்பாகம். | மேகம். நீருண்டமேகம். | மழை. | பனி மழை. |

உஷ்ணப் பிரதேசங்களில்கூட பனிக்கட்டி ஆலங்கட்டி மழை மூலமாக கீழேவிழும்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன் பி. ஏ. எல். டி.

# பௌத்த சங்கங்கள்

## BUDDHIST ASSEMBLIES



கௌதமர் நிர்வாணமடைந்த நாலு மாதத்துக்கெல்லாம் ராஜகிருகத்துக்கு அரசனான அஜாதசத்துரு என்பவரால் முதற்சங்கம் கூட்டப்பட்டது. சிஷ்யர்கள் கௌதமருடைய உபதேசங்களை மறக்காதிருப்பதற்கு முந்தியே அவ்வுபதேசங்களைத் தெளிவு செய்து தர்மத்தின் விதிகளை வரையறுக்க வேண்டி இச்சங்கத்தை அஜாதசத்துரு கூட்டினார். பரிசுத்தமான உபதேசங்களை எழுதுவது தகாதென்று அக்காலத்திலெண்ணப்பட்டு வந்தது. ஆதலால் அக்காலத்தில் சாஸ்திரங்களெல்லாம் மனனம் பண்ணப்பட்டு வந்தன. சங்கத்துக்கு வந்துள்ள ஒவ்வொரு தேர்சும் (Theras) * கௌதமரிடமிருந்து கற்ற உபதேசங்களை வாக்கியம் வாக்கியமாக எடுத்துச் சொல்லுவார். அச்சபையில் கூடியிருக்கும் ஏனையோரெல்லாம் இப்படிச் சொல்லப்பட்ட வாக்கியங்களைத் திரும்பக்கூறி மறக்காதவண்ணம் நெட்டுருவேற்றுவார்கள். இப்படிக் கூடிய முதல் சங்கத்தில் தலைமை வகித்தவர் மகாகாசியபா (Maha Kasiapa). அப்பொழுது விநய (Vinaya) பீடகத்தை உமாலியும், (Umali) சுத்த பீடகத்தை ஆநந்தரும், (Ananda) அபீதம் பீடகத்தை அநுருத்த

* பௌத்த சாஸ்திரங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள்,

3

நும், (Anuruddha) சந்தை சொன்னார்கள். இச்சீடர்கள் மூவருமே இம்மூன்று பீடங்களிலும் அதிவித்பன்னர்களென்று கௌதமரே சொல்லியிருந்தார். அநேக லட்சம் பௌத்த சந்நியாசிகளால் நியமிக்கப்பட்டு 500-தேரர்கள் இச்சங்கத்தில் வந்து கூடியிருந்தார்கள். இவர்களெல்லாரும் மகா பரிசுத்தமானவர்கள், நிரம்பக்கற்றவர்கள். இச்சபை ராஜகிருகத்துக்கு அருகாமையிலிருந்த சதாபான (Sathapana) குகையில்கூடிற்று. மேற்சொன்ன உபதேசங்கள் ஏழுமாதம் சந்தை சொல்லப்பட்டன. அதற்குப் பிறகு விதிகளெல்லாம் வரையறையப்பட்டு அவற்றிற்கு தேர்வாதம் (தலைமைத் துறவிகளின் வார்த்தை) என்னும் பெயருமிடப்பட்டது. இவைதான் இப்பொழுது பர்மா, சிங்களம், சீயம் தேசங்களில் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

கௌதமர் நிர்வாணமடைந்த இரண்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் பௌத்த சமயத்தில் முதல் தடவை பிரிவு உண்டாயிற்று. அப்பொழுது இந்தியாவிலிருந்த அநேக யதிகள் "தசசம்ஸ்காரங்களில்" கூறியிருக்கும் பிக்ஷுக்களின் ஆசிரமவிதிகளை மாற்றவேண்டுமென்று சொல்லி தேர்வாத வியாக்கியானத்தை உபேட்சை செய்யத் தலைப்பட்டார்கள். பௌத்தர் நிர்வாணமடைவதற்குக் கொஞ்சகாலைக்கு முன் தன்னுடைய சிற்றுபதேசங்களையெல்லாம் சங்கம் இஷ்டப்படி விலக்கிவிடலாமென்று உத்தரவு கொடுத்திருந்தார். ஆனால் முதற் சங்கத்தில் கூடினவர்கள் இவ்வனுமதியைப் பிரயோஜனப்படுத்தவில்லை, ஏனெனில் ஜகத்குரு போய்விட்டதால் அவருடைய சிஷ்யர்களெல்லாம் பயமில்லாமல் அவருடைய உபதேசங்களைக் கண்டாகண்டபடி மாற்றிவிடுகிறார்களென்று ஜனங்களுக்கு பௌத்தசமயத்தில் நம்பிக்கை குன்றிவிடும் என்று எண்ணினார்கள். ஆனால் இப்பொழுது பிரிவுபட்ட யதிகள் அவர்களுடைய ஆசிரமவிதிகளின் கடுமையைத் தணிக்கவேண்டி கௌதமர் கொடுத்திருந்த அனுமதியைப் பிரயோஜனப்படுத்தத் தீர்மானித்தார்கள். இவர்கள், யதிகள் பொன் வெள்ளியைத் தானம் வாங்கலாமென்று வாதித்தார்கள். ஆனால் தேர்வாத வியாக்கியானர்கள் பௌத்தர் முதலிலேற்படுத்தியிருந்த விதிகளைக் கண்டிப்பாய் அனுஷ்டிக்கவேண்டுமென்று சச்சரவு செய்தார்கள். இப்படிமாறுபாடடைந்த அபிப்பிராயங்கள் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக வேசாலி (Vesali) என்னுமிடத்தில் இரண்டாவது புத்தசங்கமொன்று கூட்டப்பட்டது. காலசோகன் (Kalasoka) என்னும் மன்னன் யதிகளெல்லாம் வேசாலிக்கு வந்துகூடும்படி ஒரு மசோதா அனுப்பினான். 12-லட்சம் யதிகள் தங்களபிப்பிராயத்தை வெளியிட்டு வாதிக்கும்படியாக 700-வித்தியா சம்பன்னரான தேரர்களைத் தேர்ந்தெடுத்து சங்கத்துக்கு அனுப்பினார்கள். இச்சங்கத்தில் மகாயாசர் (Mahayasa) என்பவர் தலைமை வகித்தார். எட்டுமாதம் சந்தையும் வாதமும் நடந்தது. கடைசியில் முதல் சங்கத்தின் தீர்மானங்களே இதிலும் ஆமோதிக்கப்பட்டன.

ஞாபகசின்னங்களில் பிரியதாசி (Priyadasi) என்று கூறப்பட்டிருக்கும் ஸ்ரீதர்மாசோகரால் (Asoka) மூன்றாவதுசங்கம் பாடலீபுரத்தில் கூட்டப்பட்டது. அசோக ராஜனுடைய வெகு விஸ்தாரமான ராஜ்யத்துக்கு பாடலீபுத்திரம் தலைநகர். சமயத்தின் தூய்மையைப் பலசச்சரவுகள் சேர்ந்துகலைப்பதாயிருந்தபடியால், என்றும் சன்மார்க்கத்தையே யிசசித்தவனான அசோகமகாராஜன் தன்தேசத்திலிருந்த சிரேஷ்டமான யதிகளை அழைப்பித்து விநயபீடகத்தைப் பழையபடி பரிசுத்தமாக ஸ்தாபிக்கும்படி வேண்டிக் கொண்டான். திரும்பவும் ஒரு பெரிய சபைகூடிற்று. இதில் வந்திருந்த வித்பன்னரின்தொகை ஆயிரம். இதில் தலைமை வகித்தவர் மகா தேரரான் திஸ்ஸ மொக்கலபுத்திரர் (Tissa Moggaliputta). இவர் ராஜகிருகத்தில் கூடிய சங்கத்தில் விநய பீடகத்தை சந்தை சொன்ன கௌதமரின் சிஷ்யரான உபாலியின் ஆசாரிய பரம்பரையில் நான்காமவர். இவர் விநயபீடகத்தைக் கரைகண்டவர்; பௌத்த சமயத்தின் சாஸ்திரங்களையெல்லாம் நன்றாகக் கற்றவர். இவர் 20-வது வயதில் யதியானவர். அவருக்கு இந்தச் சமயத்தில் வயது 96. சாஸ்திரங்களில் தர்மம், ஆசிரமம், இவற்றில் சந்தேகத்துக் கிடமான கடின பாகங்களையெல்லாமெடுத்து வினாவிடை ரூபமாக கதாவஸ்து (Kathavasthu) என்னும் ஒரு கிரந்தம் இயற்றியவர். பிரிவுகாரர்களால் செய்யப்பட்ட ஆட்சேபனைகளுக்கெல்லாம் இக்கிரந்தத்தில் சமாதானம் சொல்லப்பட்டிருந்தபடியால் இது பாடலீபுத்திரத்தில் கூடிய தேரர்களுக்கு வெகு ஆவசியகமாயிருந்தது. அச்சபையிலேயே இக்கிரந்தத்தையும் ஒருசாஸ்திரமாக்கி திரிபீடகத்தோடு இதுவும் ஒன்று சேர்க்கப்பட்டு மனப்பாடம் செய்யப்பட்டது. இதுவரையில்மூன்று

சங்கங்களும் ஒரேவிதமான தீர்மானங்களைச் செய்தன. இதற்கு மேற்பட்டு சங்கங்கள் இருவகையாகப் பிரிந்தன. நாலாவது சங்கம் காஷ்மீரில் ஒன்றும் சிங்களத்தில் ஒன்றுமாக நடத்தப்பட்டது. காஷ்மீர் சங்கம் பிரிவு பட்டவர்களின் வாதத்தை ஆமோதித்தது. இதற்கு மகாயன பௌத்த சமயம் என்று பெயர். சிங்களத்தில் தீர்மானித்த கொள்கைக்கு ஹீனயன பௌத்த சமயம் என்று பெயர். மகாயன சங்கம் காஷ்மீர் நாட்டரசனை கனிஷ்கரால் கி. பி. முதல் நூற்றாண்டில் கூட்டப்பட்டது. திரிபீடகங்கள் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டன. அசோகன் ஹீனயன புத்த சங்கத்தை எவ்வளவு விருத்திசெய்தானோ அவ்வளவு கனிஷ்கன் மகாயன சங்கத்தை ஆதரித்தான்.

ஆதிகாலத்தில் கூடிய நான்காவது சங்கம் சிங்களத்தில் வர்த்தகாமனி (Varthagamani) என்னும் அரசனால் ஆலோக விகாரத்தில் (Aloka Vihara) கட்டப்பட்டது. இதில் தலைமை வகித்தவர் சங்கராஜா மாகிந்தா (Sanga Raja Mahinda). இதில் 500-தேரர்கள் வந்து கூடினார்கள். இந்தச் சங்கத்தில் பௌத்த சாஸ்திரங்களெல்லாம் வியாக்கியானங்களோடு பனையோலைச் சுவடிகளில் வரையப்பட்டன. பௌத்தர் நிர்வாணமடைந்து 455-வருஷங்களுக்குப் பிறகுதான் திரிபீடகங்கள் முதல் முதல் எழுதப்பட்டன. இவைகள்தான் பர்மாவுக்குவந்தன.

கி. பி. 19-வது நூற்றாண்டின் பின்பாதியில் மிண்டான்மின் (Mindon Min) என்னும் அரசன் மாண்டலேயில் 5-வது சங்கம் ஒன்று கூட்டினான். இதற்குப் பர்மாவில் வெகுதூரத்திலிருந்தும் தேரர்கள் வந்து சேர்ந்தார்கள். இப்படிச் சேர்ந்தவர்களின் தொகை 2400. இதில் தலைமை வகித்தவர் பௌத்த யதிகளுக்கெல்லாம் தலைவரான தாதனபாயிங் (Thathanabaing) என்னும் சங்கராஜர். இதற்குமுன் சங்கங்களில் நடந்ததுபோலவே இதிலும் திரிபீடகங்களும் சந்தை சொல்லப்பட்டன. இது முடிவதற்கு 5-மாதமாயின. இந்த ஐந்துமாதமும் மிண்டான்மின் தனது சொந்த பொருளைக்கொண்டே தேரர்களைப் போஷித்துவந்தான். இப்படிச் சந்தை சொல்லும்போது, அரசனும், ராஜகுலத்தாரநேகரும் அடிக்கடி வந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்வரசன் மாண்டலேயில் லோகமாரஜித் (Lokamarajit) அதாவது உலகமாயையை வென்றவன் என்னும் ஒரு பெரும் ஆலயத்தைக் கட்டிமுடித்தான். அதில் பளிங்குபோன்ற சலவைக்கற்களை வரிசையாகநிறுத்தி அவற்றில் திரிபீடகங்களையும் கல்தச்சர்களைக்கொண்டு எழுதச் செய்திருக்கிறான்.

## மகாயனம், ஹீனயனம்

புத்தமதம், மேல் வரைந்துள்ள இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். மகாயன பௌத்த சமயம், சீனா, நேபாளம், திபேத்து, மங்கோலியா, கொரியா, ஜப்பான், கொச்சின்சைனா முதலிய வடக்கு தேசங்களில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஹீனயனம், பர்மா, சிங்களம், சீயம்முதலிய தென்தேசங்களில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மகாயன சமயத்தார்க்கு ஸமஸ்கிருதமும் ஹீனயன சமயத்தார்க்கு பாலியும் தூயபாஷைகள். மகாயனத்தின்படி நிர்வாணத்துக்கு மேற்பட்டு ஒரு பரமபதவியிருக்கிறது. அப்பதவிக்கு செல்லுபவர், துன்பம் மரணம், ஆண் பெண் பிரிவு, இவைகளினின்றும் விடுபட்டு நித்தியானந்தமாய் வாழலாம். ஹீனயனத்தில் நிர்வாணத்துக்கு மேற்பட்ட பதவிகிடையாது. அறவினைகளையும் தீர்த்தவர் அப்பதவிக்குப் போகலாம். மகாயனம் பிராம்மணமதத்தைஅநேக விஷயங்களில் ஒட்டியிருக்கிறது. சிருஷ்டிகர்த்தாவான பரமாத்மா ஒருவரிருக்கிறாரென்றும் அவருக்கு ஆதிபுத்தரென்று பெயரென்றும்மகாயனர் கொள்ளுகிறார்கள். என்றும் அழியாத ஜீவாத்மா ஒன்று இருக்கிறதென்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் ஹீனயனரோ இவை யொன்றையும் நம்புவதில்லை. மனிதன் பிறபொருளின் ஒத்தாசையின்றி தன் முயற்சியினாலேயே முக்தியடையக்கூடுமென்றும் புத்தரே இப்படி முக்தி பெற்றவர்களில் மேலானவரென்றும், ஹீனயனர் நம்புகிறார்கள். "அவனன்றி ஓரணுவு மசையாது" என்பதை ஹீனயனர் நம்புவதில்லை.

ஹீனயனரின் கொள்கை தர்மார்த்தத்தை யனுசரித்தது. மகாயனர் பலதேவதைகளையும்,அமானுஷ்யமான செய்கைகளிலும் நம்புவார்கள். ஹீனயனர் அமானுஷ்ய மென்பதே கிடையாதென்றும், நன்மைக்கும் தீமைக்கும் மனுஷ்யனுடைய நடக்கையே காரணம் என்றும் கொள்ளுகிறார்கள்.

# இந்துலேகை

## ஒரு மலையாள நாவல்

## இரண்டாம் அத்தியாயம்

(முன்தொடர்ச்சி)

"இதோ சொல்லுகிறேன்" என்றாரம்பித்துச் சொல்லத்தொடங்கினன் மாதவன்,—

"இந்தீவராக்ஷி தவ தீக்ஷ்ண கடாக்ஷ பாண-
பாதவ்ரணே த்விதய மௌஷதமேவ மந்யே.
ஏகம் த்வதிய மதராம்ருதபாநம் அந்யத்
த்வத்துங்க பீந-குச-குங்கும-பங்க-லேப:".

[அதாவது: கருநெய்தல் மலர்போன்ற கண்களையுடையவளே! உன் கண்களாகிய கூரிய பாணங்கள் ஆடவர்மீது விழுதலால் உண்டாகும் புண்ணை ஆற்றவல்ல மருந்து இரண்டே என நான் நினைக்கிறேன். ஒன்று, உன் இதழமுதைப் பருகுவதும், மற்றது, உன்னை இறுகத்தழுவி, பருத்தும் நிமிர்ந்துமுள்ள நின் குசங்களின் குங்குமச்சேற்றின் பூச்சைப் பெறுவதுமேயாம்].

"சரி, நல்ல ஔஷத முறைதான். ஆனல் இம் மருந்து எப்படி உனக்குக் கிடைக்கும்" என்றாள் இந்துலேகை.

"அது இந்துலேகையின் கைவசமாகவே இருக்கிறது" என்றான் மாதவன்.

"ஆனல் அதை இப்போது எடுக்கமுடியாது. பனி அதிகமாயிருக்கிறது. உள்ளேபோய்ப் படுத்துக்கொள். பைத்தியக்காரனைப்போல் நடந்துகொள்ளாதே" என்றாள் இந்துலேகை.

"அதிருக்கட்டும். எனக்கு அம்மருந்து எப்போதாகிலுங் கிட்டுமோ? "கிட்டும்" என்று இந்துலேகை வாயில் வந்தாற்போதும். எனக்குப் பரம சந்தோஷம். இம்மாதிரி என்னை வாட்டாதே. அந்த ஒரு வார்த்தைமட்டும் உன் வாயினின்று வந்தாற் போதும். அதுவே எனக்குப் பேரானந்தத்தைத் தரும். அவ்வளவு பாக்கியமாவது எனக்கு இருக்கக்கூடாதா?" என்றான் மாதவன்.

"மாதவா! என்னை அறியாமல் எனக்குத் தூக்கம் வருகின்றது. நான் போகவேணும். என்னைவிடு" என்று சொல்லிக்கொண்டே இந்துலேகை தானிருக்கும் அறைக்கு விரைந்து சென்றாள்.

இப்படி மாதவனுக்கும் இந்துலேகைக்கும் இடையில் பலதடவைகளில் பரஸ்பரம் நடந்த ஸல்லாபங்களைக்குறித்துச் சொல்வதானல் பூர்வ கதாப்பிரஸங்கமாய் ஆரம்பித்த இந்த அத்தியாயம் ஒரு மகாபாரதமாய்ப் பெருகிவிடும். ஆயினும் அவர்களுக்குள் நடந்த மற்றொரு ஸல்லாபத்தை என் வாசகர்களுக்குச் சொல்லாமல் மேலேபோக என் மனம் ஒப்பவில்லையாதலால் அதைச் சொல்லுகிறேன்.

இந்துலேகையின் ஞாபகமே அல்லும் பகலும் மாதவன் மனத்திற் குடியிருந்தபடியால் அவனுக்கு மண்டைக் காய்ச்சல் உண்டாய்விட்டது. ஓரிரவு மாதவன் படுத்துக்கொண்டு தூங்கவேண்டுமென்று எவ்வளவு பிரயத்தனப்பட்டும் அவனுக்குத் தூக்கம் வரவேயில்லை. அவ்வாறு தூக்கம் வராமல் அவன் படுக்கையில் புரண்டுகொண்டிருக்கையில் பின்வருமாறு தனக்குள் யோசிக்கலாயினன்.

எதற்காக நான் இப்படி இவ்வளவு தூரம் அவஸ்தைப்படவேண்டும்? இந்துலேகைக்கு வாஸ்தவத்தில் என்மீது காதலிருக்குமாகில், அவள் எத்தனை தினங்களுக்கு முன்னமே என் மனைவியாய் விட்டிருப்பாள். அவளுக்கு என்மேல் ஒருவிதமான அபிமானம் உண்டென்பதில் சந்தேகமில்லை. ஆனல் அந்த அபிமானம் காதலோ, அல்லவோ என்னும் சந்தேகம் என் மனதைப் பெரிதும் வாட்டுகிறது. என்னைவிட அதிக பதவியும், பாக்கியமுமுள்ளவர்கள் பலர் அவள் கையை நாடியிருக்கிறார்கள் என்பது இந்துலேகைக்குத் தெரிந்த விஷயந்தான். உலகத்தில் மாதர்கள் அநேகமாய் இடம், பொருள், ஏவல் முதலியவைகளையுடையவனையே மணம் புரிகிறார்கள். இவற்றையெல்லாம் நினைக்கும்போது, அவளுக்கு என்மேல் எவ்வளவுதான் இஷ்டமிருந்தாலும், என்னையவள் மணம் புரிவாளென்று எனக்குத் தோன்றவில்லை. அவள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், கடைசியில் பெண்பிள்ளைதானே! ஆகவே நிச்சயமில்லாத இவ்விஷயத்தைப்பற்றி நான் ஏன் இப்படி மனோவேதனையால் ஏக்கங்கொள்ள வேண்டும்? நாளை விடியற்காலத்திலெழுந்து வேட்டையாடப் போகின்றேன். அநேகமாய் என் தகப்பனும் என்னுடன் வருவார். நாங்கள் வேட்டையாடி அநேக நாளாயிற்று. என்னைப் பெரிதும் வாட்டும் இக்காமஜ்வரமானது என் ஆண்மையை அபஹரித்துவிட்டது. சிறு பிள்ளைத்தனமான குற்றத்தையுங் காதலையும் வெல்ல முயலாமல், இவளுக்குக் கீழ்ப்படிந்து அடிமையாய்விட்ட யான் எவ்வளவு அவமானத்திற்கும்எளனத்திற்கும்ஆளாகிவிட்டேன். ஆ! என்ன என் புத்தி! என்ன என் ஆண்மை! இந்துலேகைக்கோ கலியாணஞ் செய்வதற்குப்புக்தகாலம்

வந்துவிட்டது. இராஜாங்கத்தில் ஓர் உயர்ந்த பதவி யாவது, வேறெவ்விதமான சிறந்த இடம், பொருள், ஏவல்களையாவது நான்பெறுமட்டும் இந்துலேகை மணம்புரியாதிருப்பாளென எனக்குத் தோன்ற வில்லை. ஆகையால் என் காதலை இன்னும் யான் என் மனதிற் குடிகொள்ள விடும்பட்சத்தில்அது விழலுக் கிறைத்தநீராகும். இவற்றையெல்லாந் தீர ஆலோசித்த நான் இனி அக்கைக்கெட்டாப் பழத்தினிடமுள்ள எனதாசையை என் கருத்தினின்றும் இந்தக்ஷணமே நீக்குவேன்."

இப்படிப்பட்ட தைரியமான தீர்மானத்தினால் மனதைப் பலப்படுத்திக்கொண்டு, மாதவன் கண்க ளைக் கெட்டியாய் மூடித் தூங்க முயன்றான்.

ஆனால் அவன் கண்ணை மூடினானோ இல்லையோ, அவனுடைய மனோ பாவம் மனோ தீரத்தை வென்று விட்டது. அழகிய இந்துலேகையின் உருவம் அவன் கண்களுக்கெதிரே தோன்றிற்று. அவ்வுரு வத்தினது மலர்ந்த கண்களும், செந்தாமரை முக மும், நீண்டு பாரமாயுள்ள கூந்தலும், ரோஜா மல ரின் இதழெனத்தகும் சிவந்த அதரமும், உண்மை யான இந்துலேகையின் அங்கங்களை முழுதும் ஒத்தி ருந்தன. இந்துலேகையினிடம் இத்தன்மையான அடங்காக்காதலை வைத்த மாதவன் தன் கண்களைத் திறந்து பார்த்தான். அம்மாயா ரூபம் மாயமாய் மறைந்துவிட்டது. ஐயோ! பாவம் ஏமாந்தான். உடனே நமது கதாநாயகன் எழுந்து நின்று, அதிக திடசித்தமுள்ளவன்போல அபிநயித்துக்கொண்டு, "இனியான் இந்துலேகையைக் கனவிலும் நினை யேன்." என்று சபதங்கூறி கதவை நோக்கினான். அதனருகே திடீரென ஓர் பெண்ணுருவம் நிற்பதைக் கண்டான். 'யார் அங்கே' என்று கேட்டான்.

"நான்தான்" என்று பதில் வந்தது. உடனே இந்துலேகையின் தோழியாகிய அம்மு என்பவள், "இது என் எஜமானியம்மாள் பூவரங்கிலிருந்து உமக்கனுப்பியது" என்று சொல்லிக்கொண்டு நறு மணம் வீசாநின்ற ஓர் மல்லிகை மாலையை அவன் கையிற் கொடுத்தாள். மாதவன் அதனைத் தன் கரங்களிலேற்றுக்கொண்டு பெருமூச்செறிந்தான். சிறிதுநேரங் கழித்து அப்பெண் "தாங்கள் அவளு டன் தேயிலைப் பானம் அருந்த நாளையதினங் காலை யில் அவள் இருப்பிடத்திற்கு வருவீர்களாவென என்னைக் கேட்டுவரச்சொன்னாள்" என்றாள்.

"நான் நாளை விடியற்காலம் 4-மணிக்கு வேட் டையாடப்போகிறேன். என் தகப்பனாரும் என்னு டன் வருவார்போலிருக்கிறது. நான் இருட்டின பின்பே வீட்டுக்குத் திரும்புவேன் என்று சொல்" என்றான் மாதவன்.

"நான் அப்படியே சொல்லுகிறேன். ஆனால் தாங்கள் என் எஜமானியம்மாளை விடியற்காலத்தில் வந்து பார்த்தால் நல்லது. காலைக்குச் சிவபூஜை. என் எஜமானி தினம்போல் தூங்கி எழுந்தவுடன் ஸ்நா நத்திற்குப் போவாள்" என்றாள் அம்மு.

"இராக்காலங்களில் திருட்டுத்தனமாய் ஸ்திரீ ஜாதியைப்பார்க்க வருபவன் அல்ல நான். நான் அடு த்த நாட்காலையில் அவளைப் பார்க்க வருவதாகச் சொல்." என்றான் மாதவன். அப்பெண் புன் சிரிப்பு செய்து, "நான்நீர்சொன்ன சங்கதியைச் சிறி தும் மாற்றாமல் இந்துலேகையினிடஞ் சொல்லு கிறேன்" என்று கூறிவிட்டு மாதவனிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டாள்.

மாதவனது சொற்களைக்கேட்ட இந்துலேகை திரும்பியும் அம்முவை சிலசங்கதிகளுடன் மாதவன் வீட்டிற்கு அனுப்பினாள்.

தன் கையிலிருந்த அழகிய மாலையை உற்றுப்பார் த்து எண்ணமிட்டுக்கொண்டிருந்த மாதவன், இரண் டாந்தரம் வந்த அமமுவைப் பார்த்து, "நீ, திரும்பி யும் எதற்காக வந்தாய்?" என்று வினவினான்.

"தாங்கள் வேட்டையாடப் போம்போது தரித் துக்கொள்ள ஒரு குல்லா பின்னிக்கொண்டிருக்கின் றாள் என் எஜமானியம்மாள் இந்துலேகை. அவளு டைய அறைக்குக் காலையில் தாங்கள் வர முடியாதா யினும், தயவுசெய்து அவர்களறையின் சன்னலுக் கெதிராக விருக்கும் தோட்டத்திற்காவது வந்தால் அக்குல்லாவைத் தங்களிடம் தருவதாகச் சொன் னாள்" என்றாள் அப்பெண்.

"அதை அவள் உன் மூலமாய் அனுப்பாததேன்?" என்று கேட்டான் மாதவன்.

"இன்னும் அது முடியவில்லை போலிருக்கிறது" என்றாள் அத்தோழிப்பெண்.

"அதிருக்கட்டும், அவள் இரவில் என் பின்னல் வேலை செய்கிறாள்?" என்று கேட்டான் மாதவன்.

"அவள் சதா இரவுமுழுவதும் படிப்பதும் வேலை செய்வதுமாகவே யிருக்கிறாள்." தூக்கமென்பது சுத்தமாய்க்கிடையாது" என்றாள் அம்மு.

"என்ன காரணம்?" என்று மாதவன் கேட்ட

தற்கு அப்பெண் பதில் வார்த்தை யொன்றுஞ் சொல்லாமல் மௌனம் சாதித்தாள். பிறகு பதில் ஒன்றுஞ் சொல்லத்தெரியாமல் புன்சிரிப்பு சிரித்தாள்.

மாதவன்: "சரி, நீ போகலாம். நான் காலையில் புறப்படும்போது ஜன்னல் திறக்கப்பட்டிருந்தால், உன் எஜமானியைப் பார்க்கிறேன். மூடப்பட்டிருந்தால், நான் நேரே போய்விடுவேன்." என்று சொல்லி யனுப்பிவிட்டான் அம்முவை. தோழிப்பெண்போய் விட்டவுடன், மாதவன் மறுபடியும்யோசிக்கலானான்.

"இந்துலேகை இரவில் தூங்குவதில்லையாம். வாஸ்தவமாய்—அவள் என்மீது காதலுடையவளோ? என்றால் அதைச் சந்தேகிக்கமுடியாது. அப்படியிருந்தால், அவள் தன் காதலை ஏன் இதுவரையில் வெளிப்படுத்தினாளில்லை? அவளது நடவடிக்கைகளோ சிறு குழந்தைகளினது நடவடிக்கைகளை ஒத்திருக்கின்றன. இதெல்லாமென்ன?"

இவ்வளவு சந்தேகங்களையும் மனதில் வைத்துக் கொண்டு, மாதவன் தன்னிடத்தை விட்டெழுந்து, காலைத் தொழிலாகிய வேட்டைக்கு வேண்டியவற்றையெல்லாம் சித்தப்படுத்தினான். முதலில் ஒரு துப்பாக்கியை எடுத்துத் துடைத்து அதில் ரவைகளைப்போட்டு கெட்டிசெய்தான். மற்ற வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போகும்போது சமையற்காரனைக் கூப்பிட்டு காலை 4-மணிக்குத் தேயிலைக்கஷாயம் தயார் செய்யச்சொன்னான். 4-மணிக்குக் கண் விழித்து, வேட்டைக்குரிய சட்டைகளையுஞ் செருப்பையுந் தரித்துக்கொண்டு டீ சாப்பிட்டான். உடனே, ஒரு வேட்டைக்காரன் உடன்வர வேட்டையாடுமிடத்திற்குப்போகும் வழியிலுள்ள இந்துலேகையின் வீட்டிற்குப் போனான் மாதவன். வீட்டண்டைவந்து, திறக்கப்பட்டிருந்த சாளரத்தின் வழியாய்ச் சந்திரபிம்பத்தையொத்த அவளதழகிய முகத்தைப் பார்த்தான். சாளரத்தின்மீது சார்ந்துகொண்டிருந்த இந்துலேகையின் ரூபலாவண்யத்தைக்கண்ட மாதவன் அவளதழகிலேயே மதிமயங்கிவிட்டான்.

"நீ ஏன் இவ்வளவு சீக்கிரமாய் புறப்பட்டுவிட்டாய்? ஜீவவதைசெய்ய இஷ்டப்பட்டுபோகும் உனக்கு மிருக ஜாதிகளும், பட்சிகளும் கண்ணுக்குத் தெரியவேண்டாமா? இந்த மையிருட்டில் உமக்கு எப்படி அவைகள் தென்படும்?" என்று கேட்டாள் இந்துலேகை.

"வேட்டையாடுமிடம் தூரத்திலிருக்கிறது" என்றான் மாதவன்,

"ஓ! நீ ஏதோ பலத்த வேட்டையாடப் போகின்றாய்போலும், இதுதானா உன் கருத்து?" என்றாள் இந்துலேகை.

"ஆ! நீ கூறுவதுபோல பலத்த வேட்டையென்றே சொல்லலாம். இப்படி வேட்டையாவதாடி என் மனக்கவலையை ஒழிக்கலாமென்று நினைத்துப்போகிறேன்." என்றான் மாதவன்.

"பலே பேஷ்! பட்டணத்திலிருந்து நீ இம்முறை ஏதாவது துப்பாக்கி கொண்டு வந்தாயா? என்று கேட்டாள் இந்துலேகை.

"ஒரே ஒரு துப்பாக்கிதான்."

"எனக்கு அதைப் பார்க்கவேண்டுமென்றிருக்கிறது. அதை இங்கே அனுப்பு" என்றாள் இந்துலேகை.

மாதவன் தன் காதலியின் விருப்பத்தின்படி வேலைக்காரனிடமனுப்புவித்தான் துப்பாக்கியை. இந்துலேகை அதை வாங்கித் தன்னறையில் வைத்துப் பூட்டிவிட்டாள். பிறகு வேலைக்காரியை ஒரு விளக்கு கொண்டுவரச்சொல்லி மாடியினின்றிறங்கி மாதவனிடம் வந்தாள்.

"நீ அனுப்பிய துப்பாக்கி வெகு அழகாயிருக்கிறது. ஆனால் தற்காலம் அது மாடியிலேயே இருக்கட்டும். உனக்காகப் பின்னிக்கொண்டிருக்கும் குல்லாவை இன்னும் நான் முழுவதும் முடித்தேனில்லை. அது நாளையாவது, அடுத்த நாளாவது முடிந்துவிடும். அப்போது வேட்டைக்குப் போகலாம். இப்போது படுக்கப்போ" என்றாள் இந்துலேகை.

"இது நிரம்ப நன்றாயிருக்கிறது! எனக்கு வேட்டையாடக்கூட அதிகாரமில்லைபோலும்" என்று ஆச்சரியத்துடன் கூவினான் மாதவன்.

"அப்படிதான்! உன்னால் இன்றைக்குப் போக முடியாது" என்று இந்துலேகை சொன்னாள்.

"சரி, ஏன்? என்ன காரணம்? தயவுசெய்து சொல்."

"குல்லா தயாராகாத காரணமாய்த்தான்."

"அக்குல்லா வேண்டுமென்று நான் எப்போதாவது சொன்னேனா?"

"வேண்டாமென்று நீ எப்போதாவது சொன்னாயா? என் தோழி நேற்று உன்னுடன் வார்த்தையாடியபோது நீ அப்படி சொல்லவில்லையே."

"எனக்கு வேண்டாமென்று நான் இப்பொழுது சொல்லுகிறேன்."

"இது மகா குரூரம். நான் உன் வார்த்தையை செவிகொடுத்துக் கேளேன். உனக்கு வேண்டியதில்லையென்று நீ நேற்றையே சங்கதி தெரியப்படுத்தியிருந்தால் நான் இரவெல்லாம் கண்விழித்து இவ்வளவு கஷ்டப்பட்டிரேன். நான் இரவைப் பகல்போலெண்ணி இவ்வளவு கஷ்டப்பட்டபின் நீ வேண்டாமென்று சொல்லுகிறாய். மிகவும் நன்றாயிருக்கிறது உன் வார்த்தைகள்!"

"இம்மூடத்தனமான வார்த்தைகள் எனக்கு வேடிக்கை வார்த்தைகளாகப் புலப்படவில்லை. இப்படி மனிதர்களை வருத்துவதில் உனக்கென்ன திருப்தியும் சந்தோஷமும் உண்டாகிறதோ எனக்கு தெரியவில்லை" என்றான் மாதவன்.

"மாதவா! இப்போது நானுமொரு குழந்தை, நீயுமொரு குழந்தையென்று நான் எண்ணிக்கொள்கின்றேன். ஆகையால் நாமிருவரும் ஒருகாலத்தில் விளையாடிக் கொண்டிருந்ததுபோல் இப்போதும் விளையாடுவோம் வா" என்றாள் இந்துலேகை.

"என்ன! இந்துலேகை. நேற்றுதான் நீ நாமிருவரும் இனி யொருபோதும் குழந்தைகளைப்போல் விளையாடக்கூடாது என்று சொன்னாய்" என்று மாதவன் பதில் கூறினான். இந்துலேகை, "ஆம், நீ அப்போது குழந்தைபோல் நடந்துகொள்ளவில்லையாதலால் தான்." என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, மாதவன் ஒன்றுந் தெரியாதவனாய்ச் சோர்ந்து தோட்டத்தில் இங்குமங்குமாய் உலாவிக்கொண் டிருக்கையில், அவனைத் தனியே விட்டுவிட்டு ஸ்நானஞ்செய்யப் போய்விட்டாள். இந்துலேகை ஸ்நானஞ் செய்துவிட்டுத் திரும்பியபோது நன்றாய் வெளிச்சமாய்விட்டது. மாதவனை டீ சாப்பிட அழைத்தாள். மாதவன் அவளிருக்கும் அறைக்குப் போக இசைந்தானேயொழிய, அவளுடன் டீ சாப்பிட இசைந்தானில்லை. இந்துலேகை மிகவுங் கட்டாயப்படுத்தியபின்மேல் கொஞ்சம் அருந்த இசைந்தான். அறைக்குட்சென்று இருவரும் தனித்தனி நாற்காலிகளில் உட்கார்ந்து சற்றுநேரம் வரைக்கும் மௌனமாயிருந்தனர். இந்துலேகை முதன்முதலில் மௌன விரதத்தை ஒழித்து மாதவனைப் பார்த்து 'நீ இன்றைக்கு வேட்டையாடப்போகிறதில்லை' என்றனள்.

"இத்தகைய பாலிய சேஷ்டைகள் இனி என்னிடம் வேண்டாம். வேறு எவனிடமாவது இச்சேஷ்டைகளைச் செய். இனி ஒருக்ஷணமும் என்னால் சகிக்க முடியாது" என்றான் மாதவன்.

"எதை உன்னால் சகிக்கமுடியாதென்றாய்? வேட்டையாடுவதையா?" என்று கேட்டாள் இந்துலேகை.

"நான் என் உட்கருத்தை ஒளியாமல் உள்ளபடி சொல்லிவிடுகிறேன்" என்றான் மாதவன்.

"அவசரப்படாதே! கொஞ்சம் நிதானி. நீ உள்ளதைச் சொல்லவேண்டுமென்பதல்ல எனது விருப்பம்; ஆண்மையும் மனோதிடமும் பொருந்தியவனென்று உன்னை இதுவரைக்கும் நான் எண்ணியிருந்தேன். இப்போது உன் நடவடிக்கையைக் கவனித்துப்பார்த்தால், நான் உன்னைப்பற்றி அவ்வளவு உயர்ந்த அபிப்பிராயங் கொண்டது சரியல்லவெனத் தோற்றுகின்றது." என்றாள் இந்துலேகை.

"இவ்விஷயத்தில் மட்டும் என்னால் ஒன்றும் சாத்தியப்படவில்லை. நீ அடிக்கடி சந்திக்கும் மூடர்களிலொருவனென என்னையுங் கருதாதே. நான் இதுவரைக்கும் துஷ்ட சகவாசஞ் செய்தவனல்லன்; உன்னைக் காணுமுன் நான் ஒரு பெண்ணையுங் கண்ணெடுத்துப் பார்த்தவனுமல்லன்; அவர்களுடன் உரையாட விரும்பினவனுமல்லன். இவைகளால் தான்போலும் நான் முதலில் கொண்ட காதல் என்னை அவ்வளவு ஸ்திரமாய்ப் பிடித்துக்கொண்டது. இன்னும் என்னை இவ்வாறு துன்பப்படுத்த நீ இஷ்டப்பட்டால், நான் இப்போதே இந்த அறையைவிட்டுப் போய்விடுவேன்" என்றான் மாதவன்.

"இந்த ஊரைவிட்டு அயலூருக்குப் போய்விட்டால், இப்பொழுது உன்னை வருத்தும் எண்ணங்களும் கவலைகளும் உன்னைவிட்டு அகன்றுவிடும் போலத்தோற்றுகிறது. எனக்குத் தெரிந்தமட்டும், நான் உன் கண்முன்னிருக்கும் வரையில்தான், உனது காதலும் அதனாலுண்டாகும் உனது துன்பங்களும் இருக்கும்போலும்?" என்று கேட்டாள் இந்துலேகை.

"இல்லை. நான் அந்த எண்ணத்துடன் சொல்லவில்லை. என் ஆசைப்பொருளாகிய இந்துலேகையை யான்பெற்று அவளுடன் என் வாழ்நாளை சுகமே கழிக்காவிட்டால், என் வீடும் என் நாடும் எனக்கொருவித இன்பத்தையும் தரா என்பதே எனது எண்ணம்" என்று கூறினான் மாதவன்.

"நீ என்மீது எவ்வளவு காதல்கொண்டிருந்தபோதிலும், நான் உன்மீது காதல்கொள்ளாது உன்னை அலக்ஷியஞ் செய்தால்கூட, அப்போதும் என் மீது

ருக்கும் உன்னுடைய காதல் மாறுதலடையாதிருக்குமா?'' என்றுகேட்டாள் இந்துலேகை.

"இந்துலேகை! என்மீது உனக்கு ஏதோ கொஞ்சம் ஆசை இருக்கிறதென்றே நான் எண்ணுகிறேன்'' என்றான் மாதவன்.

"இன்னும் என்ன உனது கவலை'' என்றாள் இந்துலேகை.

"அது உனக்குத் தெரியவேண்டுமோ?'' என்று கேட்டான் மாதவன்.

"ஆமாம், சொல்.''

"நான் சொல்லுகிறேன், கேள். எனது மனக்கவலைக்குக் காரணங்கள் இரண்டுண்டு. ஒன்று, உத்தியோகத்தினாலாவது, செல்வத்தினாலாவது, புகழினாலாவது நான் சிறந்தவனல்லன். இரண்டு, இந்நாட்டில் இராஜாங்கத்தில் உயர்ந்த பதவி வகித்திருப்பவர்களும், செல்வத்தினால் சிறப்புடையவர்களும், வேறு முகாந்தரங்களினால் சிறப்பும் மேன்மையும் உடைய அநேக பிரபுக்களும், இளவரசர்களும், அரசர்களும் உனது ரூபலாவண்ணியத்தைக் கண்டு மதிமயங்கிக் கிடக்கின்றனர்'' என்றான் மாதவன்.

"மாதவா, நான் உன்னை இவ்வளவு மதிகெட்டவனென்று இதுவரைக்கும் நினைக்கவேயில்லை. நான் இராஜ குமாரர்களையாவது அல்லது இந்நாட்டிலுள்ள வேறெந்த பிரபுக்களையாவது மணம் புரிய இஷ்டப்பட்டிருந்தால், எப்போதே அவர்களை என் கணவராக்கிக்கொண்டிருப்பேன். அந்த எண்ணத்தை என் மனதில் நான் வைத்திருந்தால் இதுவரைக்கும் நான் மணம் புரியாதிருப்பேனென்று எண்ணுகிறாயா? இவ்வளவு பைத்தியக்காரத்தனமான வார்த்தை உன் வாயினின்று வெளிப்பட்டதைப்பற்றி நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். இதைப்போன்ற விஷயங்களில் எனக்குப் பணமும், உயர்பதவியும் துரும்புக்குச் சமானம். என் காதல் எவன்மீது செல்கிறதோ அவனைத்தவிர வேறு எவரையும் நான் கலியாணம் பண்ணிக்கொள்ளேன்'' என்று பதில் சொன்னாள் இந்துலேகை.

"நீ யாரையாவது உன் மனதில் வரித்திருக்கின்றாயோ?'' என்று கேட்டான் மாதவன்.

"சுத்த புத்திஹீனனாகிய மாதவா? நான் யாரையாவது என் மனதில் வரித்திருந்தால் உனக்கேன் அதைப்பற்றிச் சொல்லவேண்டும்?'' என்றாள் இந்துலேகை.

"என்னை ஏன் இவ்வாறு தூஷிக்கிறாய்? இதுகூட அவசியமா?'' என்று வாதாடினான் மாதவன்.

"போதும், போதும், நிறுத்து. மாதவா! உனக்கு வரும் ரோஷம் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது! இந்துலேகை உன்மீது காதல் கொண்டிருக்கிறாளெனக் கருதிய நீ அந்த இந்துலேகை அவளழகில் மயங்கிய பிரபுக்களையாவது அரசர்களையாவது மணம் புரிந்து அவளது உண்மையான காதலுக்கும் பெருமைக்கும் துரோகஞ்செய்வாளெனப் பின்னுங் கருதினையோ? ஓ, மாதவா! மாதவா! நீ என்ன கண்மூடி! நீ என்ன மூடாத்மா! இந்துலேகை இவ்வளவு துரோகியெனவும் இவ்வளவு இழிந்தவளெனவுங் கருதிய பிறகும் அவளிடத்திலிருந்த உனதாசை எப்படி அகலாதிருந்தது!'' என்றாள் இந்துலேகை.

இம்மொழிகளைக்கேட்ட மாதவனது கண்களில் கண்ணீர் தாண்டவமாடினது. இக்கண்ணீர் குதூகலத்தினால் உண்டாயினதோ, அல்லது கர்வத்தினால் உண்டாயினதோ? அல்லது நாணத்தினால் உண்டாயினதோ? என்பதை இக்கதையைப் படிப்பவர்களே அறிந்து கொள்வார்கள்.

"மாதவா, ஏன் கண்ணீர் வடிக்கிறாய்? என் கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாததன் காரணமாகவா?'' என்று கேட்டாள் இந்துலேகை.

"உன் கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாததனாலல்ல, நான் மௌனமாயிருக்கிறேன். உன்னுடன் வாதாடுவதில் எனக்கொரு சந்தோஷமுமில்லையென அடிக்கடிச் சொல்லியிருக்கின்றேன். இந்துலேகை, நான் இங்கே மூடத்தனமாய் வந்தேன். நான் வந்தது முதற்கொண்டு என்னிடம் நீ இனிப்பும் மதுரமுமான ஒரு வார்த்தையுஞ் சொன்னாய் இல்லை. புருஷர்களுடன் இம்மாதிரியெல்லாம் விளையாடி அவர்களை வதைப்பதில் மலையாள நாட்டுப் பெண்களுக்குள்ள சுதந்தரங்களினாலும் சாலவசதிகளினாலும் புருஷர்களாகிய நாங்கள் படும் அவஸ்தை, ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனாலுமெடுத்துரைப்பதரிதென்பது உண்மையே'' என்றான் மாதவன்.

"என் வார்த்தைகளை எப்படி யான் இனிப்பாக்குவது? முதலில் கொஞ்சம் தேனைப் பருகிவிட்டு அப்புறம் பேசட்டுமா? அல்லது, நான் பேசும்போது நீ தேனைப்பருகுகிறாயா? அப்போது என் வார்த்தைகள் மதுரமாயிருக்கும்போலும். நீ சுத்த மூடத்தனமாய்ப்பேசினாய். உன் வார்த்தைகளுக்குத் தக்க மறுமொழி நான் கூறியபோது, அது

உனக்கு இனிப்பாயிராமல் கசப்பாயிருக்கிறதென்கின்றாய்? இதிருக்கட்டும், நீ என் மலையாளநாட்டுப் பெண்களைத் தூற்றுகிறாய்? அவர்கள் புருஷர்களை வாட்டுவதில் அதிக சுதந்தரங்களுடையவர்களென அவர்களைத் தூற்றினாயே, அப்படித் தூற்றினதில் உனது கருத்தென்ன?" என்றுகேட்டாள் இந்துலேகை.

"இவ்வளவுதானா அவர்களைப்பற்றி. மற்ற நாட்டுப் பெண்களிடத்திருக்கும் நற்குணமாகிய கற்புஎன்பது மலையாள நாட்டுப்பெண்களிடம் இல்லவே இல்லை. மலையாளத்தில் மாதர்கள் ஒரு கணவனை கல்யாணஞ் செய்துகொண்டபின் அவன்மீது ஆசை குறைந்தால், அவனைத் தள்ளிவிட்டு வேறொருவனை மணம் புரிவதிலும், இதைப்போன்ற இன்னுஞ்சில விஷயங்களிலும், அவர்களிஷ்டப்படி நடக்க சர்வசுதந்திரம் உடையவர்களாயிருக்கிறார்கள். இதனால்தான் நம் மலையாளநாட்டு ஸ்திரீகள் கொஞ்சங் கர்வமுடையவர்களாயிருக்கிறார்கள். இதுதான் நான் சொன்னது" என்றான் மாதவன்.

"பலே பேஷ்! நீ சொல்வது மிகவும் அழகாயிருக்கிறது. நீ கல்வி கேள்விகளிற் சிறந்தவனாயிருந்தும், இதுதானா மலையாள ஸ்திரீகளைப்பற்றி உனது அபிப்பிராயம்? அப்படியா! எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது." என்றாள் இந்துலேகை.

மாதவன், 'மலையாளத்தில் மாதர்களிடம் கற்பு என்னும் நற்குணம் இல்லை' என்று என்ன கருத்துடன் சொன்னான் என்பதை, நாம் நம் கதையைச் சிறிது நிறுத்திவிட்டு யோசிக்கலாம். மாதவன்கூறிய இம்மொழிகள் மிகவும் கடோரமானவையே. ஏனென்றால், அயல் நாடுகளில் போலவே, மலையாள நாட்டிலும் பதிவிரதாதர்மத்தை அனுசரிப்பவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். தன் கொள்கைகளை வெளிப்படுத்தக்கூடிய எந்த ஸ்திரியாவது இவ்விஷயத்தைப்பற்றி வாதஞ்செய்வாளாயின், அவளது மொழிகள் அனேகமாய்ப் பின் வருமாறு அமையும்.

"ஒரு ஸ்திரீ விவாகபந்தத்தை அற்பமாய்க் கருதுகிறாளென்று சொல்வது அவளை வியபசாரியென்றே சொல்வதாகும் அப்படியானால் இம்மலையாள நாட்டிலுள்ள எல்லா ஸ்திரீகளுமாவது, அல்லது இவர்களில் அநேக பேர்களாவது வியபசாரிகள் என்னுங் கருத்துடன் சொன்னானா மாதவன்? அவன் அப்படிச் சொல்லியிருந்தால், என்மட்டும் நான் அவனை நம்பமாட்டேன். நாயர்மாராகிய நாங்கள், பிராமணர்களைப்போல அந்நிய புருஷர்களுடன் ஸ்திரீகளைப் பேசவொட்டாமல் தடுத்தும், அவர்களுக்குக் கல்வியறிவையே யூட்டாமலும், கேவலம் மிருகஜாதியைப் போல் ஸ்திரீ ஜாதியை நடத்தாமலிருக்குங் காரணத்தினால், அவன் நாங்கள் வியபசாரத்துக்கு இடங்கொடுக்கிறோம் என்று அபிப்பிராயங் கொண்டிருந்தால், இதைவிடத் தவறான அபிப்பிராயம் வேறொன்றுமில்லை. புருஷர்களுக்கு எவ்வளவு சுதந்தரங்களும் படிப்பும் இருக்கிறதோ, அவ்வளவு சுதந்தரங்களையும் படிப்பையும் உடைய ஸ்திரீகளிருக்கும் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களைப் பார்! இந்த ஸ்திரீகளெல்லாம் வியபிசாரிகளாயிருக்கிறார்களா? அந்நாடுகளில், கல்வி கேள்விகளிற் சிறந்த அழகிய ஸ்திரிகள் புருஷர்களிருக்கு மிடத்தில் தாராளமாய்ப் போய்வந்துகொண்டும், அவர்களுடன் தாராளமாய்ச் சம்பாஷித்துக்கொண்டும் இருப்பதனால், அப்புருஷர்களுக்கும் இந்த ஸ்திரீகளுக்கும் சிநேகப் பான்மையைவிட அதிகமான சம்பந்த மிருக்கிறதெனக் கூறி விடலாமா? சங்கீதத்தில் தேர்ச்சியுடைய ஒரு ஸ்திரீயின் பாட்டைக் கேட்கப்போகும் மனிதர்களை வேறுவிதமான துர் எண்ணத்துடன் போகிறார்களென்று சொல்லிவிடலாமா?

(தொடரும்)

---

நியாயாதிபதியின் கடமைகள்.—ஒருவனை தூஷிப்பது மிகவும் எளிது. அவனுடைய ஸ்நேஹிதர்கள் அவன் குற்றத்தை மறைத்து வாதாடுகிறார்கள். அவன் சத்துருக்கள் அவன் குற்றத்தை அதிகரித்தே பேசுவார்கள். நியாயாதிபதி தனது காதில் நேரில் ஒரு விதமாக ஒரு சமாசாரத்தைக் கேட்டும் அதைச் சரியென்று நம்பிவிடக்கூடாது. ஆதலால் முற்கூறப்பட்ட தூஷணை உண்மைதானா என்று கண்டுபிடிப்பது மிகவும் அரிது. அப்படி தாம் செய்யப் பிசகினால் உலக நிந்தை தமது தலையில் வருவது நிச்சயம். நியாயஸ்தலத்தில் வந்து உட்காரும் நியாயாதிபதி, படித்தவனாகமட்டு மிருந்தாற் போதாது. அமரிக்கையுள்ளவனாகவும், கோபம் என்பதே இல்லாதவனாகவும், சமபுத்தியுள்ள தர்மிஷ்டனாகவும் இருக்கவேண்டும். தீர்ப்பைச் செம்மையாய் ஆலோசித்துச் சொல்லுகிறவனாக இருக்கவேண்டும். பல மற்றவர்களுக்கு ஒரு பிடிப்பாகவும், துஷ்டர்களுக்கு ஒரு சர்ப்பமாகவுமிருக்கவேண்டும். உண்மை, நியாயம், இவைகளைத்தவிர மற்றொரு விஷயத்திலும் தன் மனதைச் செலுத்தாதவனாக நியாயாதிபதி இருக்கவேண்டும்.

# சிறுவர்க்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

ஸித்தர்கள்.—இக்கலிகாலத்திலும் ஸித்தர்கள் இல்லாமலே போகவில்லை. சென்ற பௌர்ணிமா (ஐப்பசி பௌர்ணிமா) அன்று தேவகிரி என்னும் ஊரில் ஸித்தர் ஒருவர் ஓர் அற்புதச்செயலைச் செய்தார். இந்தத் தேவகிரிக்கருகாமையில் ஸுந்தரபந்த (அதாவது அழகிய தடாகம் என்று பொருள்) என்ற ஓர் இடம் இருக்கிறது. அது ஸாலமரங்கள் நிறைந்த காடாகவிருந்தது. இப்பொழுதுதான் அது திருத்தப்பெற்றுச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதில் இங்கும் அங்கும் சிற்சில மரங்கள் இன்னும் நிற்கின்றன. இந்தவிடம் தேடி முற்கூறிய ஸித்தராகிய பவானந்த ஸ்வாமி என்பவர் பௌர்ணிமாவன்று வந்தார். அங்கு 8-அடி சதுரம், 6-அடி ஆழம் உள்ள ஓர் குழிபறிக்கும்படி செய்து அதனுள் அடிமறையும்படியாகப் பலகைகளைப் பரப்பி அதில் வியாக்ரசர்மம் போட்டு ஸ்வாமிகள் உட்கார்ந்தார். தமது தலை தாக்காதவண்ணம் பலகைகளால் முதலில் தம்மைமூடி மேல் மண் போட்டு விடும்படி ஏற்பாடு செய்தார். அவருக்கு ஸஹாயமாக இருந்தவர்கள் அவ்வாறே செய்து, அவர் புதைபட்டுக்கிடக்கும் இடம் தெரிவதற்காக 5 அல்லது 6-அங்குலம் உயரமான திண்ணை ஒன்று மேலே செய்து அதில் மஞ்சளால் பூசப்பெற்ற பூர்ண கும்பத்தை வைத்துவிட்டு ஸ்வாமியினிடம் இருந்த பக்தியால் மாறி மாறி அவர்கள் அங்கு ஸாம்பராணி தூபம் போட்டு வந்தனர். சுற்றிலும் கமகம என்று வாஸனை பரவியது. ஆனால் அது உட்செல்ல இடமே இல்லை.

முதலில் ஸ்வாமிகள் ஒருவருக்கும் சொல்லாது ரகஸியமாக இவ்வாறு செய்துவிட்டபோதிலும், இச்தஸங்கதி பின்னர் எங்கும் பரவியது. மேலும் இவர் கிருஷ்ண துவாதசியன்று வெளி வந்துவிடப்போகிறார் என்றும் எல்லோருக்கும் தெரிய வந்தது. தெய்வபக்தியுடைய ஜனங்கள் அனேகர் ஸ்வாமிகள் புதைந்துகிடப்பதையும், அவர் வெளி வருவதை தரிசித்து கிருதார்த்தராக அங்கு கூட்டங்கூட்டமாக வரத் தலைப்பட்டனர். இந்த ஸங்கதியை பத்திரிகையில் போட்டு வெளிப்படுத்தியவரும் போயிருந்தார், அவர் பின்வருமாறு இந்த ஸித்தி வித்தையைப் பற்றி அபிப்பிராயப்படுகிறார்.

'நான் போய் நேரிட ஸ்வாமி புதைந்துகிடந்த இடத்தைப் பார்த்தேன். உள்ளே கொஞ்சம் கூடக் காற்று புகுவதற்கு இடம் இல்லை. வெளிச்சமும் போக இடமில்லை. நான் ஐந்து நிமிஷம் ஸ்வாமியுடன் அவர் இருந்த நிலைமைப்பற்றி பேசினேன். அவர் பேச்சு என் காதில் நன்றாக விழுந்தது. தாம் அப்பொழுதிருந்த நிலை ஸமாதி நிலைமையைவிட மேலானதென்று அவர் சொன்னார் ஆதலால் ஸ்வாமிகள் குழியுள் இருக்கிறார் என்றும் அவர் ஸமாதியில் மூழ்கி மெய்ம்மறந்திருக்கவில்லை என்றும் நான் தெரிந்துகொண்டேன். ஆதலால் இவர் அந்தக் குழியுள் இருக்கவேண்டிய 12-நாளும் அன்ன ஆகாரம், வெளிச்சம், நல்லகாற்று, ஒன்றும் இல்லாமல்தான், இருக்கவேண்டும். இது பெரிய அற்புதச் செய்கை. நமது தேச சரித்திரத்தைப்பற்றித் தெரிந்தவர்களுக்கு இதேமாதிரி ஹரிதாஸர் என்ற ஓர் ஸித்தர் ரஞ்சிட்ஸிங் என்ற ஸிக் அரசன் லாஹூரில் அரசாண்ட காலத்தில் 40-நாள் பூமியுள் புதைந்து அன்னாகாரமின்றிக் கிடந்தார் என்பது தெரிந்திருக்கும். அது பவானந்தர் ஸித்திக்குத் தாழ்ந்ததென்றே சொல்லவேண்டும். ஏனெனில் (1) ஹரிதாஸர் ஸமாதியில் மூழ்கி வெளிப்பிரஞ்ஞையே இல்லாதிருந்தார். ஆனால் பவானந்த ஸ்வாமியோ அவ்வாறின்றி ஸகல பிரஞ்ஞையோடு கூடி யோக வலிமையால் புதைந்து கிடந்தார். (2) ஹரிதாஸர் தாம் செய்த ஸித்தி மூலமாக ரஞ்சிட்ஸிங்கிடமிருந்து வந்த பண ரூபமான பரிசை அங்கீகரித்தார். இம்மாதிரி பணம் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு பவானந்தர் இவ்வாறு செய்ததாகக் காணப்படவில்லை

'மேலும் பவானந்த ஸ்வாமி 30 வயதுக்கு உட்பட்டவரே. அவர் தாய் இருக்கிறாள். அவர் முதல் பெண்சாதி ஓர் குழந்தையைவிட்டு இறந்துபோக அவர் இரண்டாவது பெண்சாதியும் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார்'

முற்கூறியவைகளை உற்றுநோக்கின் பவானந்த ஸ்வாமிகளைப்பற்றி இரண்டொரு கேள்விகள் நம்முன் பிறக்கும். முதலாவது, ஸ்வாமிகள் பணத்தாசையின்றி இந்த ஸித்தியைக் காட்டியபோதிலும் கீர்த்திவேண்டும் என்ற ஆசை அவருக்கில்லை என்பதற்கு தகுந்த காரணங்கள் இல்லை. மேலும் ஸமாதியில் இல்லாது இவருக்கு எவ்வளவு நாள் இவ்வாறு

புதைந்து கிடக்கமுடியும். நமது சாஸ்திரங்களில் வித்திகளை அவாந்திரபலன் என்றும் ஆத்ம ஸாக்ஷாத்காரமாகிய மோக்ஷத்தையே மனிதன் ஆசைபட்டு அடைய முயலவேண்டும் என்றும், மோக்ஷமார்க்கத்தில் முற்கூறியவைபோன்ற வித்திகள் தடையாக இருக்கும் என்றும், ஆதலால் அவைகளை நாம் ஒருபொருட்டாக எண்ணக் கூடாதென்றும் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் நமது யோகவிஷயங்களில் அவநம்பிக்கை மிகுந்த காலத்தில், முற்கூறிய வித்திவித்தைகள் எவ்வளவு யோகத்தின் பலத்தைக் காட்டியோதிலும் நாம் அவைகளைக்கண்டு வியந்து அவைகளே மனித ஜன்மத்தின் முடிவு என்று எண்ணித் தயங்கி நின்றுவிடக்கூடாது. மேன்மை அடையவேண்டும் என்ற ஆவலுடைய புத்திமான்கள் அவைகளை நெல்விதைத்தால் அதிலிருந்து உண்டாகும் வைக்கோல், பதர் முதலியவைகளுக்கு மைானமே யொழிய அவை தானிய மணிகளைப் போன்றதாயுள்ள மோக்ஷத்திற்கு ஈடல்ல என்று தெரிந்து நடந்து கொள்ளவேண்டும். இந்த ஸந்தர்ப்பத்தில் நாம் பின்வரும் பாடல்களை ஸதாஞாபகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

'முனிவர் வித்திகள் விநோதம் மாத்திரந்தரு
முத்தியைத் தாரவே'

கைவல்யநவனீதம் ஸந்தேகம் தெளிதற்படலம் 46-ம் பாட்டு.

'சினமிறக்கக் கற்றாலும் வித்தி எல்லாம்பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே'

தாயுமானவர் பராபரக்கண்ணி 169-ம் கண்ணி,

* *
*

"யுலிஸ்ஸிஸ்".—(மொழிபெயர்ப்பு-ஆசிரியப்பா.)

புல்வள மற்றவிப் பாறைகள் சூழ்ந்தவில்
வில்வழி நற்றெழி லொன்றுமில் லரசனுப்
ஆயுண் மூத்த அரிவையோ டமைதிசேர்
ஆயுள் வாழ்ந்து அடைபொருள் ஈட்டலும்
துஞ்சலு முண்ணலும் தொலையாராகி
எஞ்சலி லென்மனம் என்று முணரா,
நாகரீகம் அடைந்திலா இந்நார்க்
கேக மற்ற விதிகளை புன்னி
விதித்தி ருத்தல் வீண்டொழில் வீண்டொழில்

சஞ்சரித் தல்லது சும்மா விரேன்யான்
ஆயு ளீபு மனுபவ மெல்லாம்
காயம் போம்வரைக் காணுவல் பற்பல
நாள்க ளெல்லாம், நேயர்க ளுடனிலும்,
தோள்க ளேதுணை யாகவும், வாருதி
அங்கரை மீதிலும் அணிமழை யாற்கடல்
பொங்கும் வேளையும், புனகமென், துக்கமென்,
கண்டுளேன் என்பெயர் காசினிப் போந்தது
மண்டுமோர் மனனுடன் மண்மிசைச்சென்று

கண்டது முணர்ந்ததும் கணக்கிட லரிதே.
பல்வகை மன்பதை வாழுமா நகரமும்
பல்வகைத் தேயமுஞ் சங்கமு மரசும்
பார்வை யிட்டுளேன், பண்பு பெற்றுளேன்
ஆர்வ மோடுள அன்பரோ டாயிடைக்
கால்வளர் ட்ராய்ப்பெருங் கானிடை பூசலின்
மேல்வளர் களியிக முகர்ந்து பருகினேன்.
பழகிய பல்வகைப் பொருள்களின் ஒவ்வோர்
அழகிய பாகமே அடைந்துளேன் யானும்
ஆயினு மனுபவ மென்பதோர் குகைவழி
வாயிடைத் தோன்றும் வளமிகு முலகெலாம்

செல்லச் செல்லச் சென்றிடு மதனடி
மெல்ல இருத்தலே மேன்மையென் றுன்னி,
உயிர்முடி வடைவான் உட்கார்ந் திருத்தல்
பயனில தந்தோ! பளிச்செனத் திகழாத்
துரு மூடத் தூங்குத லிழிவே.
ஆரி லாயுள் அநேகம் பெறினும்
அத்தனைப் பொழுதும் அங்கைய ளவே
நம்முடை யாயுளில் நிற்பது மற்பமே
ஆயினும் உழைப்பால் அச்சிறு வேளையைப்

போயெடுத் தடைந்து பயன்பெரு வேம்யாம்.
மனமதற் கெட்டா மாண்பொடு விளங்கி,
இன்னென வொளிரு மறிவினை யடைவான்
என்றும் விரும்பும் இதய மிருக்கத்
துன்றுஞ் சின்னாள் தூங்கல் இழிவே.
இங்குள னென்மகன் இனிய டேலாமகன்
செங்கோ லவற்கே கொடுப்பனித் தீவுடை
என்மனத் தன்பன் இத்தொழில் முற்றும்
தன்மனத் துணர்வோன் தகைமையில் குடிகளைச்
சிறிது சிறிதாய் உயர்த்தியம் முடிவினில்

பெருமை கொள்ளப் பெருக்குநற் குணவான்.
கடமைகள் பலவுங் கழிகிலா தியற்றி
நடலை யகற்றி நன்மனங் கொண்டு
யாகை ன்றுலுமென் னில்வதி கடவுளர்க்
கான வந்தனை யன்புட னளிப்பான்

அவன்தொழில் அவன்செய்வான் யானு மதுவே
உவண் துறை யுள்ளது ஒக்கு நாவாய்
கவன்று தன்பாயைக் காற்றொடு விரிக்குமால்.
பரந்து கறுத்த பரவையும் அதோபார்!
சிறந்தவென் மாலுமிச் செல்வர்காள்! என்னொடு

முயன்றுங் கவன்றும் முந்திய வீரர்காள்
அஞ்சுத லகற்றி அசனியும் வெயிலையும்,
எஞ்சலின் மனத்தொடு மிகழ்ந்து நகைத்துளிர்
நீரும் யானும் நேர்ந்தோம் மூப்பை.
வாரும் அஞ்சன் மின் வயோதிக மின்னும்
பெருமையும் பாடும் பெறுவது திண்ணம்.
மரணம் நம்மை மறைப்பது திண்ணமேல்
வருவதன் முன்னர் வண்மையாய் ஒரு தொழில்
வகையுடன் செய்வோம் வானவர் குழுவுடன்

இகல் செயலுற்றவர் இன்றோ யாமும்.
பாறைகள் மீது பலவொளி பிறங்கும்.
நீண்டநாளும் சேர்ந்த தர்தியை
ஈண்டுச் சோமனும் ஏறுமென் கதியுடன்.
ஆழியும் பற்பல அரவமோ டெலம்பும்.
சூழுமின் நண்பர்காள் சொல்லுவன் கேண்மின்!
இன்னும் வேற்றுலகம் அடைந்திட இன்றை,
நன்கு மூத்துளேம் என்று நினையன்மின்.
சென்மினேருடன் வங்கமிருந்து
தோணி மிகுதிரைகளைத் துடுப்பாலோட்டுமின்
ஏனெனில் யானும் என்று மறைவதற்

கப்புறம் தாரகை ஆழ்ந்துள இடஞ்செல
உப்புமீது யிலொழி வரையுமே ஊர்வல்
வாருதி எம்மை வதைப்பினும் வதைக்கும்
சிறொளிர் தீவிடைங் சேரினுஞ் சேருவோம்
நண்பன் அங்கிலிஸ் நாடினும் நாடுவோம்
திண்வலி மிக்குத் தொலைந்ததேயாயினும்
எஞ்சிய தின்னும் எளிதிலை முன்னர்
விஞ்சையர் ஊரையும் விரிந்த மண்ணையும்
நிலை பெயர்த்துள்ள வலியிலே மாயினும்
நிலைத்துள தின்றும் நம்மிடத்துள்ளது.

கலங்கா நெஞ்சக் காவலர் யாமெலாம்
விலங்கலின் விதியினும் வளர்ந்த நாளினும்
வலி யிழந்துளேம் எனினும் நன்மன்வலி
நண்ணி, ஊக்கி, நாடிய தடைந்து
விளங்கு வதன்றி, வீரமற் றுள்ளம்
துளங்கோம், வணங்கோம், துகளிலாத் தோழரே!

சு. நரசிம்மாசாரியன்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

---

## கண்ணகி அல்லது பத்தினிக்கடவுள்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணமாற்—றெய்வ
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி [மாய்
விண்ணக மாதர்க்கு விருந்து.

சிலப்பதிகாரம்.

தன் கணவனது மனங்கோணாது, அவனுக்கு வேண்டியவை எல்லாம், எக்காலத்திலும், எவ்விடத்திலும், எவ்வமயத்திலும் இடைவிடாது நடக்கும் பெண் ஒருவளே உலகு முழுவதும் இன்பமும் துன்பமு மூட்டுபவள். அவளிடத்து நீதியில்லா நடத்தைசெய்ய நினைப்பவர் துன்பமுறுவர். தாம் யோசியாதாவது, அல்லது தெரியாமையாலாவது செய்திடினும் தேவைஇல்லை, துன்பமுறுவ ரென்பதற்கு ஸந்தேகமொன்றுங் கிடையாது. அவரது நடத்தையைச் சிறப்பித்து அவர் குணங்களை மணக்கச் செய்பவர் நலமடையாமல் இருக்கமுடியாது. ஆகையினாலே நன்னடத்தையும் நற்குணமுங் கலந்த பெண்ணொருவளே உலகைக்காத்துத்தாங்கி விளங்கச் செய்யும் வல்லமையுடையாள் என்று கொள்ளவேண்டியதாகி வருகிறது. அவரது குணவிசேஷங்கள் கொடியவரை மடியச்செய்து, நல்லவர்களை நலமுறச் செய்யும் தகைமை உடையனவாகையால் அவர்களை தெய்வீகத்தன்மை உடையார்களாகக் கொள்ளும் படியாகச் செய்கிறது. அவரது நன்னடத்தையும், தன்னை மறுத்து எல்லாவற்றையும் கணவற்கு அளிக்கும் அன்பின் ஒட்டமும் அவரை யாவராலும் தடுக்க முடியாமலிருக்கச் செய்துவிடுகிறது. அவர்க்கு யாவரேனும் கொடியது சூழினும் சூழ்பவனை தெய்வமும் காத்திடல் முடியாது போகும். ஆகையால் கடவுளினது ஆஞ்ஞையும் அவரது நடத்தை என்னுமட்டத்துள் சிக்கிவிடுகின்றது. அத்தகைய வல்லமையுடையப் பெண்டிர் கடவுட்டன்மையுற்றவரென்று நாம் சொல்லாமல் வெளிப்படை என்பதற்கோர் ஐயமுமில்லை. அந்நிலைமையை யுற்று எப்பெண்டிர் தன் கணவன் தனக்குத் துன்பமுறும்படி செய்திடினும் அவர்க்கு அன்பெ

ன்னும் அமுதம் ஊட்டி தனது நன்னடக்கை ஆதரவு கண்ணோட்டம் இவைகளால் உபசரிக்கின்றனளோ அவளை பத்தினிக்கடவுள் என்னல் இழுக்கு ஆகாது. அத்தகையாள் கண்ணகி. அவள் சரிதை மேல் வருமாறு.

## 1. மதுரைப்புகுந்த காதை

சோழ நாட்டரசரில் பெரியவனும் பெயர்பெற்றவனுமாகிய சோழன்கரிகாலன் நன்னெறி தவறாதுஆண்டுவந்த நகரம். அதுபுகார் என்னும் பெயர்பூண்ட காவிரிப்பூம்பட்டிணம். அவ்வூரில், வணிகரது மரபில், சோழன் கரிகாலன் ஆண்டகாலத்து, பெருங்குடியருள் தோன்றியவன் கோவலன்,இவன் மாசாத்துவான் மகன். செல்வத்துள் சிறந்தவன். தன் தகப்பனால் தன் குலத்திலேயே யுதித்த மாநாயகன் என்பவனது மகளாகிய கண்ணகி என்பவளை மணம் புரிவிக்கப்பெற்றனன். அவளோடு சிலநாள் நன்றாக வாழ்ந்தான். நடுவில் கூடக்கூடாதவரோடு கலந்து மாதவி என்னும் பேதை மகளிடத்து காமங்கொண்டு அவளை இடைவிடாது கூடிக்குலாவி நின்றான்.

மகளிருக்குத் தன் கணவன் தம்மைக் கண்ணெடுத்துப் பாராவிட்டாலும் அவன்மேலிருக்கும் ஆசை ஓயாது. அது வரவர காணாமலே வளரும். அது அவருக்கும் தெரியாமல் ஓங்கி வளரும். இது நன்னடத்தையுடைய பெண்ணின் குணம். தன் கணவன் ஸுகமடைய வேண்டுமென்பதொன்றே அவர் கவலை. அவர் எவ்விடத்து ஸுகமடையினும் தமக்கொன்றும் குறைவு இல்லை என்றுதான் எண்ணுவர். அவர் ஸுகத்தை எவ்வாறு விருத்தி செய்யலாமென்பதே அவருக்குக் கருத்து. ஒருநாளானந்தம் மறுநாள் வெறுப்பென்ப தவரிடத்தே நிலைபெறாது. என்றும் தம் கணவர் மேலென்பதே அழியாதொழுகும். கணவர் கொடிய வழியுள் சென்றிட்டாலும் தமது நன்னடக்கையாலே அவர் மனதை உருகச்செய்துக் கொள்வார். இத்தகையக் காலம் என்று கிட்டும் என்று காத்திருப்பார். அது அவர் காக்கும் நோம்பின் பலன்போலாகும்.

இத்தகைய ஸமயம் கண்ணகிக்கும் வாய்த்தது. நமதரசராகிய முன்னோர் காலம் இக்காலம்போலதன்று. அன்றிருந்த விழாக்களும் வழக்கங்களும் இக்காலத்திலில்லை. அவரவரது ஆர்வமும் பெருமையும் தவிர மற்றொன்றும் இன்று நிலைதிலது. தமிழரசர்கள் தென் இந்தியாவை ஆண்ட நாள்சென்று ஆயிரம் வருஷங்களோடி ஒளித்துவிட்டன. அவர் காலத்துதித்த கண்ணகி வாழ்ந்த நாள் இன்றைக்குஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு வருடங்களிருக்கலாம். அவளது காலத்தில் இந்திய நாட்டில் ஆரியரும் திராவிடரும் தவிர வேறெவரும் இந்திய தேசத்திலிருக்கவில்லை. அக்காலத்து கூத்துங்குரவையும் இக்காலத்தெண்ணிலும் காண்பதரிது. இந்திரன் திருவிழாவென ஓர் கொண்டாட்டம் நடத்துவது வழக்கம். இதில் ஆண்பாலரும் பெண்பாலரும்கலந்து கலந்து குதூஹலமாக ஆநந்திப்பது வழக்கம். நாம் இப்பொழுது கொண்டாடும் "போகி பண்டிகை" இதை ஒருவாறு ஒத்திருக்குமென்று சொல்லலாம். இப்பண்டிகையில் கோவலனும் மாதவியும் கடலாடச்சென்றார்கள். கடலாடி விளையாடி ஓரிடத்திலிருவரும் அயர்ந்து சற்று நிதானித்தனர். தாம் கொண்டுவந்த வீணையை எடுத்து உல்லாசமாக வாக்துக்கொண்டிருந்தார்கள். மாதவி வாசித்துக் கொண்டிருந்த வீணையைவாங்கிக்கொண்டு ஒலியிலாழ்ந்து மகிழ்ச்சிக்கொண்டிருந்த கோவலன் இடையே சில அகப்பொருட்பாற்பட்ட பாடல் சிலவற்றை பாடினான். இதனால் மாதவிக் கிவனிடத்து வெறுப்புண்டாகியது. கோவலன் பாலுள்ள வீணையை வாங்கிக்கொண்டு அகப்பொருளிலேயே தானும் பாடினாள். (காசும் பணமும் கணக்கில்லாது மாதவி என்னும் கணிகைக்கு சிலவு செய்தவன் கோவலன் என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான்). அவனுக்குத் தான் இவ்வளவு செல்வத்தை எல்லாம் அழித்து இவள்பால் நாமிருக்க இவளுக்கு யார் மேலோ ஆசை எழும்பி உள்ளது என்று எண்ணி மாதவிபால் இருந்த ஆசையை ஒழித்து முறிந்த மனத்தொடு தன்னில்லம் புகுந்தனன்.

புகுந்ததும் தன் கணவன் ஏதோ கஷ்டமடைந்துள்ளார். அவரை ஆதரித்தல் வேண்டும். அவரது முகம் மலரும்படிச் செய்யவேண்டுமென்ற பேராவல்தூண்ட "என் வருந்துவது. உம்மிடத்து செல்வமில்லையாயின் என் காலிற்பூண்ட இச்சிலம்பைக் கொண்டுவிற்று ஸுகமடையும்" என்று வணங்கிக் கூறிய மொழிகள் கோவலன் உடலுருவியோடியது. அன்றியும் கோவலன் வந்தபொழுது கண்ணகியிருந்த நிலைமையும் அவன் பிரிவும், அப்பிரிவிலும் தன்னிடத்தொருவெறுப்பும் கொள்ளாத பெண்மணியைத்தன்பெண்டிராகக்கொண்டும் தான்

மாதவி என்னு வஞ்சகிப்பால் என் சென்றனமென்று தன்னெஞ்சே தன்னைச்சுடக் கோவலன் தனக்கும் தெரியாது கண்ணீர் வடித்தான். "பொருளொன்றே கருதும் பொதுமகளிடத்து பொய்வாழ்க்கைக்கொண்டு பொருள்முற்றும் அழித்தேன். வெறுங்கையனானேன். இனி என்னிலும் கடையன் ஒருவன் உளனோ. என் செய்வது! என்விதி! நாரியர் திலகமாய் விளங்கு முன்னைவிட்டு வாழ்ந்த வாழ்க்கையின் பயன் இவ்வாறாகியதோ—" என்று சொல்லியமொழிகள் கண்ணகியின் மனம்முழுதும் பதைக்கச்செய்தது. "ஆ! உமக்கு இத்துயர் பொருந்துமோ" என்றழுது கண்ணீர் சிந்த, "ஐய! அடியனேன் சொல்லும் மொழி எளியதாயினும் என்னை ஏளனம் செய்யாது செவி கொடுத்து கேளும்" என்று "எனது காலிற்பூண்ட சிலம்பொன்றே நமது ஏழ்மையையும் தாழ்மையையும் போக்கும். உமக்கேன் இக்கவலை. நாம் மதுரை சென்று சிலம்பை விற்று செல்வங்கொண்டு ஸுகமாய் வாழ்வோம். துக்கமடைவதே" என்றனள் கண்ணகி.

கணவன்பால் கொண்ட அன்பின் பிரவாஹம் உடலிலூற ஊற ஸுகம் துக்கம் என்னுமிரண்டும் போய் ஆனந்தம் ஒன்றே லயிக்கிறது. அதுபோல் கண்ணகிக்கும் சிறுமையொன்று மறியாதமடந்தை இவளுக்கு தன் கணவன்பின் சென்று மதுரையுற்று தானும் தன் கணவனுக வாழவேண்டும். அவன் மனது ஸுகமடையவேண்டும் என்று பட்டுவிட்டது. கோவலனோடு காவிரியாற்றைக்கடந்து மேற்கே வரும்வழியில் இவர்க்குத் துணையாக ஆருகமதத்தினைச் சார்ந்த சன்னியாவினி ஆகிய கவுந்தியும் இவரோடுகூட மதுரைக்கு வருவதாகச்சொன்னாள். போகும்வழியில் கடுமையில்லாமலிருக்கவில்லை. பலபேர் இவர்களைப்பார்த்து பலவிதம் பேசியதுண்டு. ஓர் பொதுமகன் இவரிருவரையும் பரிகசித்தனர். அவளோடுவந்த நடத்தை குன்றிய மனிதனொருவன் வாய்க்குத் தோன்றியதைச்சொன்னான். இவற்றை எல்லாங்கவனித்துவந்த கவுந்தி அவ்விலைமகளையும், அவ்விடனையும் சபித்து, தம்பதிகளின் வேண்டுகோளுக்கிணங்கி அவ்விருவர்க்கும் மறுசாபமிட்டு விட்டு மூவரும் உறையூர்வந்து சேர்ந்தனர். தங்கினவர் பார்ப்பான் ஒருவன் வழிகாட்ட மதுரை நகரடையப் புறப்பட்டனர். இடைக்கிடைத்த ஜனக்கூட்டங்களின் வழியாக வழிதெரிந்து வையையாற்றைக்கடந்து மதுரை எல்லையைக் கண்டனர்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

மத்திய மாகாணங்களில் புல் வளர்ப்பு.—மத்தியமாகாண விவசாய இலாகா அதிகாரிகள், மத்திய மாகாணங்களிலும், பேரார் நாட்டிலும் விளையும் புற்களில் முதல்தரமான புற்களை விற்பனை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு பயிர்செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். பேரார் நாட்டில் பசும்புல் அதிக விலை விற்கிறபடியால் கால் நடைகளுக்குத் தீனியாகக்கூடிய பசும்புல் லாபகரமாய் வளர்க்கப் படலாமென்று நம்பப்படுகிறது. தற்போது பேரார் நாட்டிலுள்ள அகோலா விவசாயப் பண்ணையில் பரீட்சார்த்தமாயப் பயிர்செய்து பார்க்கிறார்கள்.

* * *

ஐக்கிய மாகாணங்களில் நெசவுத்தொழில் பள்ளிக்கூடங்கள்.—ஐக்கிய மாகாணங்களில் இப்போது 5-அல்லது 6-நெசவுத் தொழில் பள்ளிக்கூடங்கள் விவசாய இலாகாவின் மேற்பார்வைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டு நடந்துவருகின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் நெசவுத் தொழில் கற்றுக்கொண்டு சுமார் 250 பிள்ளைகள் போல வெளிவந்திருக்கிறார்கள். அப்படி அப்பள்ளிக்கூடங்கள் நெசவுத்தொழில் தெரிந்த மாணுக்கர்களை வெளியாக்கிக் கொண்டிருந்தபடியால் அம்மாகாணங்களில் கைத்தறி நெசவுத்தொழிற்சாலைகள் பல இடங்களிலும் ஸ்தாபிப்பது சாத்தியமாயிற்றென்றும், இப்போது அம்மாகாணங்களில் 16- கைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் வேலை செய்துவருகின்றனவென்றும் தெரிகிறது.

* * *

மணிலாக் கொட்டைப் பயிர்.—ஐக்கிய மாகாணங்களில் இந்த வருஷம் கவர்ன்மெண்டார் 20-மணங்கு மணிலாக்கொட்டை விதை விற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்நாட்டில் மணிலாக் கொட்டைப் பயிர் செய்யப்படுவதில்லை. இனி மற்ற தானியங்களைப்போல மணிலாக்கொட்டையும் பயிர் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த மாகாணத்தில் ஜாலான் ஜில்லாவில் நல்ல லாபத்தைத் தரத்தக்க வித்துக்கள் ஒன்றும் பயிர் செய்யப் படுவதில்லையாகையால் மணிலாக்கொட்டை ஏராளமாய்ப் பயிர் செய்யப்படலாமெனப்படுகிறது. இது நிற்க, பர்மாவில் மணிலாக்கொட்டை பயிராகும் நில விஸ்தீரணம் குறைந்துபோயிருப்பதாயும், போன வருஷம் 2,39,552 ஏகர் நிலம் பயிராயிருந்ததாயும், இந்த வருஷம் 1,71,276 ஏகர்கள் தான் பயிராயிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

ஒரு பெருந்த நன்கொடை.—யுனைடெட் ஸ்டேட்ஸ் தெற்குப் பிரதேசங்களில் "ஹூக்வர்ம்" என்ற வியாதியால் 20 லக்ஷம் ஜனங்கள்வரையில் பீடிக்கப்பட்டு வருந்திவருவதைக்கேட்டு, அமெரிக்காவிலுள்ள பெருத்த கோடீஸ்வரராகிய மிஸ்டர் ராகபெல்லர் இவ்வியாதியை வேர் கல்லும் வழியைத்தேடும் பிரயத்தின விஷயமாக 20 லக்ஷம் டாலர் நன் கொடையாகக் கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வியாதியால் எண்ணிறந்த ஜனங்கள் மாண்டு வருகிறதாகவும், இவ்வியாதியால் வருந்தும் ஜனங்களின் தோற்றம் ஏறக்குறைய பெருந்தூக்க வியாதியால் (Sleeping Sickness) பீடிக்கப்பட்டவர்களின் தோற்றத்துக்கு ஒப்ப இருக்கிறதாகவும் தெரியவருகிறது. தற்போது வங்காளத்தில் தோன்றியிருக்கும் "பெரிப்பெரி" நோய் விஷயமாக மிஸ்டர் ராக்பெல்லரைப் போல் திரவிய சகாயம் செய்ய யார் முன் வருவார்களோ தெரியவில்லை. பரோபகாரார்த்தமாகச் செலவழிப்பதே பண மீட்டலின் முக்கிய கருத்தாக இருக்கவேண்டும்.

* * *

சர்க்கரையின் சக்தி.—பிரான்ஸ் தேசத்திலும் அமெரிக்காவில் சில விடங்களிலும் வியாதிஸ்தர் அறைக்குள் சர்க்கரையை எரிப்பதுண்டு. அநேக வைத்தியர்கள் இது மூட நம்பிக்கை யென்றெண்ணுகிறார்கள். பாரிஸ் நகரத்து பாஸ்டர் இன்ஸ்டிட்யூட்டிலிருந்தும் (Pasteur Institute) புரொபஸர் ட்ரில்பர்ட் (Prof. Trilbert) என்பவர் சர்க்கரை எரிவதால் பார்மிக் ஆஸிடும் (Formic Acid) அஸிடிலீன் ஹைட்ரோஜனும் (Acetylene Hydrogen) சேர்ந்த ஒரு கலப்புத்திரவமுண்டாகிறதென்றும் அது விஷக்கிருமிகளை வளரவொட்டாது செய்கிறதென்றும் சொல்லுகிறார். புரொபஸர் ட்ரில்பர்ட் 5-கிரெயின் சர்க்கரையை 10-லிடர் அளவுகொண்ட ஒரு கண்ணாடி மூடிக்குள் போட்டு எரிந்தார். அப்பொழுதுண்டான நீராவியும் வாயுவும் குளிர்ந்ததும் தொத்துவியாதிகளுக்குக் காரணபூதமான பலவித விஷக்கிருமிகளை பரிசோதனைக் குழாயிற்போட்டுத் திறந்தபடியே கண்ணாடி மூடிக்குள் 30-நிமிஷம் வைத்திருந்தார். பிறகு எடுத்துப் பார்த்தபோது ஒரு கிருமியாவது உயிருடனில்லை.

* * *

விஷஜுரம்.—மலேரியா என்னும் விஷஜுரம் அநாபலீஸ் என்னும் ஒருவகைக் கொசுக்கடியால் பரவுகிறதென்று மேஜர் ராஸ் என்பவர் முதல் முதல் கண்டுபிடித்தாரென்று தற்கால சாஸ்திர நிபுணர்களெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் கி. பி. ஆறாவது நூற்றாண்டிற் செய்யப்பட்ட சிங்காளி வைத்திய நூல்களில் 67-வகைக் கொசுக்களிருப்பதாயும் அவற்றால் 424-வித விஷஜுரங்கள் காணுவதாயும் எழுதப்பட்டிருக்கிறது.

பூகம்பம் அறிவிக்கும் கருவி.—இத்தாலியிலுள்ள ஸ்டியேட்டிஸா என்ற ஒரு நிபுணர், பூகம்பம் உண்டாவதற்கு 10 மணிக்கு முன்னமே பின்வரும் அதிர்ச்சியை அறிவிக்கும் தன்மைபொருந்திய ஒரு கருவியைக் கண்டுபிடித்திருப்பதாக அறிய யாவரும் சந்தோஷப்படுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. பிரான்ஸ், வெனிஸ், ட்ரீஸ்ட்முதலிய இடங்களில் இக்கருவியைப் பரிசோதனை செய்து பார்த்ததில் இது சரியாகவே அறிவித்ததாம். இவ்வளவு காலமாக நமது பத்திரிகைகள் மூலமாய் நாம் கேள்விப்பட்டுவரும் பூகம்பத்தாலுண்டாகிய மரணங்கள் இந்த முன்னறிவிக்கும் பூகம்பமானியால் துர்லபமாகும் என்று எண்ணுவதற்கிடமுண்டு.

---

## புத்தக வரவு

## BOOKS RECEIVED

1. துரைத்தனவிளக்கம்*.—ம-ா-ா-ஸ்ரீ T. S. சுப்பிரமணிய அய்யர் M. A. L. T. அவர்களால் இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. எலிமென்டரி பாடசாலைகளுக்கு மிகவும் உபயோகமானது. அநேகம் சித்திரப் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1 0 0

2. சந்திரகாந்தா. * —ஓர் துப்பறியும் நாவல். ராஜாம்பாள் நாவலை எழுதிய ம-ா-ா-ஸ்ரீ, J. R. ரங்கராஜு அவர்களால் எழுதப்பட்டது. விலை ரூ. 0 12 0.

---

## நமது சந்தாதாரர்களுக்கு

இப்பவும் சென்ற 16-மாத காலமாய் ஒழுங்காக 25உ பிரசுரமாகும் நமது "விவேக போதினி" பத்திரிகை, 1910ளு ஜனவரிமீ முதற்கொண்டு, பிரதியாதமும் முதல் தேதியிலேயே பிரசுரமாகும். டிஸம்பர்மாதத்திய பத்திரிகை, அந்தமீ 15உ நமது சந்தாதார்களுக்கு அனுப்பப்படும். ஜனவரிமாதப் பத்திரிகை அந்தமீ முதல்தேதி யனுப்பப்படும். எந்த சந்தாதாரர்க்கு பத்திரிகை ஒழுங்காய் கிடைக்கவில்லையோ, அவர்கள் தயவுசெய்து நமது ஆபிஸுக்குத் தெரிவித்துக்கொள்ளவும்.

நமது ஆபீசில் தமிழ்ப்புத்தகங்கள் விலைக்கு அகப்படும். பத்திரிகை சந்தாதாரர்களுக்கு மாத்திரமே நமது சொந்தப் பதிப்பு புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"விவேக போதினி"
மைலாப்பூர், மதராஸ்.

---

* இப்புத்தகம் வேண்டுவோர் 'விவேக போதினி' மானேஜருக்கு எழுதிக்கொள்ளலாம்.

# மிகவும் அருமையான தமிழ் நாவல்கள்.

ஆனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது. ... 0 8 0

போஜசரித்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவறக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்ருய் அச்சிடப்பட்டிருக்கிறது. ... ... 1 8 0

| | | | | |
|---|---|---|---|---|
| மதிகெட்ட மனைவி ... | | 1 | 0 | 0 |
| தீனதயாளு ... | | 0 | 12 | 0 |
| ஸ்ரீ மாமிகொலுவிருக்கை ... | | 0 | 8 | 0 |
| தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு | | 0 | 8 | 0 |
| வேணீ ஸம்ஹாரம் ... | | 0 | 3 | 0 |
| மிருச்சகடி ... | | 0 | 4 | 0 |
| முத்திராராக்ஷஸம் ... | | 0 | 4 | 0 |
| லீலாவதி ஸுலோசனு | ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் பி. சம்பந்த முதலியார் இயற்றியவை. | 0 | 12 | 0 |
| இரண்டு நண்பர்கள் | | 0 | 12 | 0 |
| மனேஹரன் | | 0 | 12 | 0 |
| கள்வர் தலைவன் | | 0 | 8 | 0 |
| சாரங்கதரன் | | 0 | 8 | 0 |
| சத்ருஜித் | | 0 | 12 | 0 |
| யயாதி | | 0 | 8 | 0 |
| வேதாள உலோகம் ... ... | | 0 | 8 | 0 |
| அமலாதித்யன் ... ... | | 1 | 0 | 0 |
| காதலர் கண்கள் ... ... | | 0 | 12 | 0 |
| வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம் ... | | 0 | 8 | 0 |
| வெனிஸ்வர்த்தகன் ... ... | | 1 | 0 | 0 |
| கற்புக்கரசி ... ... ... | | 0 | 8 | 0 |
| குணமாலிகை அல்லது கற்பின் வன்மை | | 0 | 6 | 0 |
| கனகவல்லி ... ... ... | | 1 | 0 | 0 |
| கமலினிகலஹம்ஸம் ... ... | | 0 | 8 | 0 |
| எலேன் ... ... ... | | 0 | 6 | 0 |
| வசீகரி ... ... ... | | 1 | 0 | 0 |
| ஞானரஞ்சனி ... ... ... | | 0 | 8 | 0 |
| ஸுஜாதா ... ... ... | | 0 | 8 | 0 |
| லலிதாங்கி ... ... ... | | 0 | 8 | 0 |
| வனஸுதா . ... ... | | 0 | 8 | 0 |
| லலிதா ... ... ... | | 0 | 10 | 0 |
| தமயந்தி .. ... ... | | 0 | 9 | 0 |
| ஞானம்பாள் ... ... ... | | 0 | 6 | 0 |
| மங்களாம்பாள் ... ... ... | | 0 | 8 | 0 |
| பேயல்ல பெண்மணியே ... ... | | 0 | 8 | 0 |
| சுகுணங்கதன் ... ... ... | | 0 | 12 | 0 |
| பாவலர் விருந்து ... ... ... | | 0 | 8 | 0 |
| வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச் சுருக்கம் ... ... ... | | 0 | 8 | 0 |
| மதிவாணன் ... ... ... | | 0 | 8 | 0 |
| வால்மீகருமாயணம் கிளைக்கதைகள் ... | | 0 | 8 | 0 |
| ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அயயர் அவர்கள் ஜீவிய சரிதம் ... ... | | 0 | 8 | 0 |
| ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம் ... | | 0 | 3 | 0 |
| அந்தப்புர ரகசியம் ... ... | | 1 | 0 | 0 |
| கவிரத்தினசிந்தாமணி என்னும் காளிதாசன்சரித்திரம் ... ... | | 1 | 0 | 0 |
| மோகனங்கி ... ... ... | | 1 | 4 | 0 |
| குடும்ப ஸம்ரக்ஷணி ... ... | | 2 | 0 | 0 |
| மன்மதகாந்தன் கதை ... ... | | 0 | 8 | 0 |
| இந்து பாகசாஸ்திரம் ... ... | | 2 | 0 | 0 |
| மகாமகம் அதின் மகிமை ... ... | | 0 | 4 | 0 |
| ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரிதம் ... ... ... | | 0 | 2 | 0 |
| கந்தபுருணச் சுருக்கம் வசனம் ... | | 0 | 12 | 0 |

---

### தயாராய்விட்டது!!!

## ராஜம் அய்யர் சரிதை

இப்புத்தகம் கமலாம்பாள் சரித்திரம் என்னும் அற்புத கதையின் நூலாசிரியராயும், பிரபுத்த பாரதம் என்ற மாதாந்த பத்திரிகையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸ்வலபமாகத் தெரிவித்தவரும் ஆகிய ஸ்ரீமான் பீ. ஆர். ராஜம் அய்யரவர்கள், பி. ஏ. என்பவரது சரித்திரத்தை யடக்கியுள்ளது. இதனுடன் இவர் செய்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள உபதேச மொழிகளையும், இவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாஸத்தையும் சேர்க்கப்பட்டுள்ளது. மிகவும் இனிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலை அணு 0 8 0

"விவேக போதினி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணு 0 6 0

ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி

மைலாப்பூர், மதராஸ்